இதழ்-61

01.07.2023

# தூமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

# அதிகரித்து வரும் தற்கொலைகளுக்கு மனநோய் குறித்த சமூக பார்வை காரணமா?




பாமரர்கள் மட்டுமல்ல படித்தவர்களும் கூட "மனநோய்" என்றால் "பைத்தியம்" என்று கேவலமாக பார்க்கும் நிலை பரவலாக காணப்படுகிறது. மனநல மருத்துவர்களுக்கு கூட எமது சமூகம் உரிய அங்கீகாரம் வழங்குவதில்லை. மருத்துவர்களுக்கே இந்த நிலை என்றால் நோயாளிகளுக்கு?

மனநோய் குறித்த நமது சமூகத்தின் இந்த பார்வையால் மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இயல்பாகவே சமூகத்தில் இருந்து சற்று விலகியிருந்து தங்களைத் தனிமைப்படுத்திக்கொள்வார்கள். இது அவர்களின் நோய்த்தன்மையை மேலும் அதிகரிக்கும் என எச்சரிக்கிறார்கள் மருத்துவர்கள்.

மனிதர்களுக்கு எந்தளவு உடல்நலம் முக்கியமோ, அந்த அளவுக்கு, ஏன்... அதைவிடவும் மனநலன் முக்கியம். நம்மில் பெரும்பாலோனோர் மனநலத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. பாரிய உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்ட பலர் மனதளவில் மிகவும் தைரியமாக இருந்து அந்த நோயைக் குணமாக்கியுள்ள சம்பவங்களே இந்தக்கூற்றுக்கு ஆதாரங்கள்.

இந்த விஷயத்தில், திரைப்படங்களின் பங்கும் மிக முக்கியமானதாக இருக்கிறது. பெரும்பாலான திரைப்படங்களில் மனநோயாளிகளை, ஒரு கொலையாளிபோலவும், கொடூரமானவர் போலவும் சித்திரிகிறார்கள். உண்மையில், மனநலம் பாதிக்கப்பட்டவர் பெரும்பாலும் அப்படிப்பட்டவர் இல்லை.

அதேபோல் சினிமாவில் மின்னதிர்வு சிகிச்சை கொடுக்கும் போது அந்த நபர் மிகவும் துடிப்பது போலவும், கதறுவது போலவும் சித்திரித்திருப்பார்கள். இது மக்களிடையே ஒருவிதமான பயத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், அதில் துளி அளவும் உண்மையில்லை. ஒரு சாராசரி மனிதன் கையால் தொட்டு உணரக்கூடிய அளவிலான மிகச் சிறிய மின்னூட்டம் சில விநாடிகள் மயக்கநிலையில் செலுத்தப்படும். இந்தச் சிகிச்சையை எடுப்பதன் மூலம் வெகு விரைவாக மீண்டும் பழைய நிலைமைக்குப் பாதிக்கப்பட்டவர் திரும்புவதற்கு அதிக வாய்ப்புள்ளது என்கிறார்கள் மருத்துவர்கள்.

( 4ம் பக்கம் பார்க்க....)

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

துமி பல்சுவை மின்னிதழ்

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்
வ.டியனி

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்துளை...

02 அதிகரித்து வரும் தற்கொலைகளுக்கு சமூகப்பார்வை காரணமா?

06 முன்னாள் காட்டு ராஜா பேசுகிறேன்

13 பரியாரியார் Vs அய்யர்

18 பாட்டுப் பாடவா..?

19 வட்டுக்கோட்டையில் பாட்டா உற்பத்தி நிலையம்

21 யாழில் நெசவுத் தொழிற்சாலை

22 கதிர்காம திருவிழா - 2023

23 பாடசாலைகளில் விழுமியக்கல்வியின் முக்கியத்துவம்

28 முடிவுக்கு வந்த தேடுதல் வேட்டை

29 என்ரை ஐயோ.... (சிறுகதை)

35 செயற்கை இறைச்சிக்கு அமெரிக்காவில் அனுமதி

36 மாணவர் மத்தியில் கொரோனாவின் தாக்கம்

40 உலகக் கிண்ண கிரிக்கெட் 2023 - மைதானங்கள் ஒரு பார்வை 01

தவிர்க்க இயலாத காரணத்தினால் சித்திராங்கதா தொடர் இம்முறை இடம்பெறாமைக்கு மன்னிக்க வேண்டுகிறோம்.

எமது சமூகத்தின் நடவடிக்கைகளால் மனநோய் பாதித்தவரின் குடும்பத்தினரும் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகிறார்கள். அந்த வீட்டை, "பைத்திக்காரன் வீடு", "கிறுக்கன் வீடு", "மென்டல் வீடு", "லூசுப் பையன் வீடு" என்றெல்லாம் அடைமொழிவைத்து அழைப்பார்கள். இது அந்த வீட்டில் உள்ளவர்களை மனதளவில் பெருமளவில் பாதிக்கும். இது அந்த குடும்பத்தவரின் மனநிலையையும் பாதிக்கச் செய்து, அவர்களையும் மனநோயாளியாக்கி விடும்.

இதுபோன்ற எமது சமூகத்தின் செயற்பாடுகளால் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவரிடம் செல்ல தயங்குகிறார்கள். ஈரல், இதயம் பாதிக்கப்பட்டால் மருத்துவம் செய்வது போல்த்தான் மூளைக்கும் மருத்துவம் என்பதை நாம் உணர்வதில்லை. மூளையில் இயற்கையாக ஏற்படும் ரசாயன மாற்றங்களால் உண்டாகும் மனநலப் பிரச்னைக்கு ஏன் வெட்கித் குனிய வேண்டும்? சிகிச்சை எடுத்துக்கொள்ளத் தயங்க வேண்டும்? இப்படித் தயங்கி சிகிச்சை எடுப்பதைத் தவிர்த்துக்கொண்டே இருந்தால், மனநோய் அதிகமாக வாய்ப்பிருக்கிறது. ஆரம்ப கட்டத்திலேயே, மனநோய்க்கான அறிகுறிகள் தெரிந்தவுடனேயே சிகிச்சை எடுத்துக்கொண்டால், பிற்காலத்தில் ஏற்படப் போகும் பிரச்னைகளைப் பெருமளவுக்குத் தவிர்க்கலாம்.

சமகாலத்தில் மனதளவில் தைரியம் குறைந்த இளைஞர் தலைமுறை உருவாகி வருவதாக ஆய்வுகள் சொல்கின்றன. இப்போது அதிகரிக்கும் படித்த இளைஞர் தற்கொலைகளும் இதற்கு வலுச்சேர்க்கின்றன. மன நோய்க்கான அறிகுறிகள் உங்கள் நண்பர்களுக்கோ, உங்களுக்கோ தென்படுமானால் தைரியமாக அதற்கான சிகிச்சைகளை பூரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு இந்த சமூகத்தின் மனநோய் மீதான பார்வை மாற வேண்டும்.

**'திண்ணிய நெஞ்சம் வேண்டும்**
**தெளிந்த நல் அறிவு வேண்டும்'**





# மனநெருக்கீடுகளில் இருப்பவர்களுக்கு உடனடி தொலைபேசி வைத்திய ஆலோசனை வழங்கும் சேவை

**24 மணி நேர இரவு பகல் சேவை**
**எந்தநேரமும் ஒரு வைத்தியரை உடனடியாக தொடர்பு கொள்ளலாம்**

நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் **071 071 2345**

துறை சார் மருத்துவர்களும் ,குழுவினரும் உங்களை ஆறுதல் படுத்தி தீர்வு காண்பதற்க / வழிகாட்டுவதற்கு தயாராக உள்ளனர் .

மனநெருக்கடிகளுக்கு உள்ளானவர்களை காண்பவர்கள் இத் தொலைபேசி சேவையை பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்துங்கள்

இச் சேவையானது முற்றிலும் இலவசமான மருத்துவ சேவையாக அபயம் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் தொடர்பான தகவல்கள் அனைத்தும் இரகசியமாக பேணப்படும்

அபயம் - கல்வி மற்றும் உடல் நலம் சார்ந்த அறக்கட்டளை அமைப்பு
**UK Registered Charity No: 1184089**

அபயம் நிறுவனம்
மானிப்பாய், யாழ்ப்பாணம்



# முன்னாள் காட்டு ராஜா பேசுகிறேன்

திரைப்படங்கள் எதார்த்தத்தை ஏளனம் செய்பவை என்பதை '*சிங்கம்னா சிங்கிளாகத்தான் வரும்.*' என்கிற திரைப்பட வசனமும் உறுதி செய்கிறது. நாங்கள் தனித்தவர்கள் அல்ல. கூட்டமாகவே வாழ்வோம். எங்கள் குழுவில் 15 முதல் 40 சிங்கங்கள் வரை இருக்கும். இதில் குட்டிகளும், பெண்சிங்கங்களும் தான் அதிகம். இவை அனைத்தையும் தலைமை தாங்க ஒரு ஆண் சிங்கம் மட்டுமே இருக்கும்.

அப்படியொரு கூட்டத்தில்தான் நான் குட்டியாக இருந்தேன். மெல்ல மெல்ல இரைகளை வேட்டையாட பழகிக் கொண்டேன். எவ்வளவு பொறுமையாக பதுங்க வேண்டும்? எப்போது பாய வேண்டும்? இரை மீதான முதல் தாக்குதல் எவ்வளவு பலமானதாக இருக்க வேண்டும்? என்பவற்றைப் பற்றியெல்லாம் நான் நன்கு அறிந்து கொண்டேன் என்பதை அறிந்து கொண்ட என் கூட்டத்தினர் ஒரு நாள் என்னை விரட்டி விட்டார்கள். திரும்ப அந்த கூட்டத்திற்குள் சென்றேன். என்னை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எங்கள் கூட்டத்தின் எல்லைக்குட்பட்ட காட்டிற்கு என் தந்தை ராசா என்பதால் நான் அவருக்கு பின் ராசாவாக முடியாதாம். நாட்டைப்போல் இங்கே குடும்ப அரசியல் செய்ய முடியாது.

விரட்டப்பட்ட நான் எனக்கான ஆட்சியை தேடிப்பிடிக்க வேண்டும். எனவே, இன்னொரு ஆண் சிங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு சென்று, அந்த சிங்கத்துடன் நேரடியாக ஒற்றைக்கு ஒற்றையாக சண்டை போட்டு வெல்ல வேண்டும். நாட்டில் நடப்பது போல அரசர்களின் ஆட்சியதிகாரத்திற்காக

மக்களை சண்டையிடச் சொல்ல முடியாது. நான் பலதடவை எண்ணுவதுண்டு. பகுத்தறிவெனும் ஆறாம் அறிவு இருப்பதாக கூறும் மனிதன் யாரோ அரசனாவதற்கு தன்னுயிரை மாய்க்கிறானே? ஆனால் ஐந்தறிவே உள்ளதாக கூறப்படும் நாங்கள் அப்படியில்லை. எங்களுக்கு ஆட்சி வேண்டும் என்றால் நாங்கள் தான் சண்டை போட வேண்டும். எங்களுக்காக எங்கள் பிரசைகள் உயிரிழக்க மாட்டார்கள். அவர்கள் குடும்பம் அவர்களை இழந்து துன்பப்பட மாட்டார்கள்.

அப்படி ஒரு சண்டையில் கொஞ்சம் வயதான ஒரு கிழட்டு சிங்கத்தை வென்று விட்டேன். அந்த சிங்கம் தன்னை கொன்று விடும்படி கேட்டது ஏன் என்று எனக்கு அப்போது விளங்கவில்லை. ஆனால் அரசனாகப்போகும் வெற்றிக் களிப்பில் நான் அதைக் கொன்று விட்டேன். இப்போது நான் அந்த கூட்டத்திற்கு ராஜா. அந்த கூட்டத்தினர் புதியவனான என்னை எதிர்க்கவில்லை. என் வீரத்திற்கு மதிப்பளித்து என்னை ஏற்றுக் கொண்டார்கள். என் நகத்தால் என் எல்லையை கீறிக்கொண்டேன்.

நகம் என்னும் போதுதான் ஞாபகம் வருகிறது. எங்கள் வீரத்திற்கு எங்கள் உடல் பலமும், கூரிய எங்கள் பற்களும், அதனிலும் கூரிய நகங்களுமே போதும். எந்த ஆயுதமும் எங்களுக்கு அவசியமில்லை. சில மனிதர்கள் எங்கள் கைகளில் வாளை ஏந்தச் சொல்கிறார்கள். எங்கள் வாலை நம்பி சண்டை செய்தாலும், நீங்கள் தரும் வாளை நம்பி சண்டை செய்ய மாட்டோம். மனிதர்களே! ஒன்றை நினைவில் கொள்ளுங்கள்! ***சிங்கங்கள் வாளை ஏந்துவதில்லை!***

ராஜாவான பிறகு நான் வேட்டைக்கு செல்வது குறைவு. எங்கள் கூட்டத்தில் உள்ள பெண் சிங்கங்களே வேட்டைக்கு செல்லும். வேட்டையாடி வரும் உணவை நான் உண்ட பின் மற்றவர்கள் உண்பார்கள். எல்லாரும் சமம் எனும் போலி வேசங்களுக்கு இங்கே இடமில்லை. ராசாவாக இருக்கும் வரை எனக்குரிய மரியாதை கிடைக்கும். அதற்காக எனக்குரிய கடமைகளையும் நான் செய்தாக வேண்டும். என் கூட்டத்திற்கோ, என் எல்லைப் பரப்பிற்கோ ஆபத்தென்றால் முதலாவதாக சண்டைக்கு போபவன் நானாகத்தான் இருப்பேன். என் கூட்டத்திலே யாருடைய உயிராவது எடுக்கப்படுகிறதென்றால் அதற்கு முதல் என் உயிர் பறிக்கப்பட்டிருக்கும்.

நாள் ஒன்றுக்குச் சராசரியாக 7 கிலோ உணவை உட்கொள்வோம்.



வரிக்குதிரை, எருமை போன்ற தாவரங்களை உண்ணும் பெரிய மாமிசங்களே எங்களுக்கு பிரியமானது. சில நேரங்களில் சிறுத்தை, சிறுத்தைப்புலி போன்றவற்றையும் உண்பதுண்டு. நாங்கள் அதிகம் தண்ணீர் அருந்துவது இல்லை. எங்கள் பார்வை மனிதனை விட ஆறுமடங்கு சிறந்ததாக இருக்கிறது. எனவே, இரவிலும் வேட்டையாட முடிகிறது. அதேபோல், எங்கள் நகங்கள் ஒன்றரை அங்குலம் வரை நீளமாக இருக்கும். ஒரு மணி நேரத்தில் 50 மைல் தூரத்தைக் கடக்குமளவு ஓடுவோம். எங்களால் 36 அடி நீளம் அளவில் குதிக்க முடியும். காட்டின் ராஜாவாக இருந்தாலும் நாங்கள் அடர்ந்த காடுகளில் வாழுவதில்லை. நிலப்பரப்பிலும், புல்வெளிகள் அதிகம் உள்ள பகுதிகளிலுமே அதிகம் வாழ்வோம். அடர்ந்த காடுகளில் புலிகள் தான் வாழ்கின்றன. எங்கள் கர்ஜனையை 5 மைல் தொலைவு வரை கேட்க முடியும். இதன் மூலம் மற்ற சிங்கங்களிடம் தொடர்பு கொள்கிறோம்.

எங்கள் சகோதரி, தாய், மகளுடன் உறவு கொள்வதில்லை. மனைவி என்று ஏற்றுக்கொள்ளும் சிங்கங்களுடன் மட்டுமே உறவு கொள்வோம். எமது இரத்த உறவு என்பதை வாசனை மூலம் கண்டறிந்து கொள்வோம். பெண் சிங்கங்கள் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை ஒரு பிரசவத்தில் இரண்டிலிருந்து ஐந்து குட்டிகளை ஈன்றெடுக்கின்றன. அவை நான்கு மாதங்கள் கருவைச் சுமக்கும். குட்டியை ஈன்றெடுக்கும் முன் தண்ணீருக்கு அருகில் பாதுகாப்பான இடங்களைப் பெண் சிங்கங்கள் தேர்ந்தெடுக்கின்றன.

குட்டிகள் 6 நாட்களுக்குப் பின் தான் கண்விழிக்கும். மேலும், அவற்றுக்கு 1 ஆண்டுக்குப் பின்னரே பற்கள் முளைக்கின்றன. எனவே அத்தனை நாட்களும், அவை தாயின் அரவணைப்பிலேயே இருக்கும். குட்டிகளை வளர்ப்பதிலும், ஆண் சிங்கங்கள் பொறுப்பேற்பதில்லை. ஆனால், மற்ற விலங்குகளிடம் இருந்து குட்டிகளைப் பாதுகாப்பதில் ஆண் சிங்கங்களின் பங்கு உள்ளது.



ஒரு சண்டையில் வென்று ராஜாவானால் இத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்யலாம் என்கிற நியதி எல்லாம் காட்டுக்குள் இல்லை. அடுத்த சண்டை அடுத்த நாளே நடந்து என் பதவி பறிக்கவும்

படலாம். *என்னை விட ஒரு வீரனை சந்திக்கும் வரைதான் நான் ராஜா.* நானும் அப்படி ஒரு வீரனை சந்திக்கும் நாள் வந்தது. எனக்கு சற்றே முதுமை வந்துவிட்டது. முன்பு போல் சண்டை செய்ய முடியவில்லை. அந்த இளம் சிங்கத்திடம் தோற்று விட்டேன். அது என்னை கொல்லவில்லை. நானும் உயிர் மேல் உள்ள ஆசையில் என்னை கொல்லுமாறு கேட்கவில்லை.

சில நாளில் மனிதர்கள் விரித்த வலையில் வசமாக மாட்டிக் கொண்டேன். பின்னால் இருந்து வந்த ஒரு மயக்க ஊசி என்னை மூர்ச்சையாக்கியது. கண் திறந்த போது ஒரு கூண்டுக்குள் அடைக்கப்பட்டு இருந்தேன். என் பலத்தையெல்லாம் பறித்து விட்டார்கள். தினமும் வரும் மாமிசத்தில் கலந்துள்ள பொருட்கள் என் வீரத்தை கொஞ்சம் கொஞ்சமாக பறித்தன. அந்த உணவு நான் உயிர் வாழ மட்டும் தான். அந்த கூண்டுக்குள் சிங்கமாக அல்ல சிங்கத்தோல் போர்த்த பூனையாக, அவர்கள் சொல்வதை செய்து வாழ்ந்து வருகிறேன்.

நாட்டில் ஒரு தடவை மந்திரியாக இருந்தாலே போதும். முன்னாள் மந்திரிகள் என்று இறக்கும் வரை ராஜ வாழ்க்கை வாழலாம். ஆனால் நான் முன்னாள் ராஜா. வீரம் இருக்கும் வரைதான் ராஜா. இப்போது வயதாகி விட்டது. அடைக்கப்பட்ட கூண்டுக்குள் தான் என் வாழ்க்கை. அவர்கள் சொன்னதை செய்தால் தான் சாப்பாடு.

இதோ அட்டையில் பார்க்கிறீரகளே! இந்த தடியை நான் தாண்டியாக வேண்டும். மழை பெய்வதை எல்லாம் நான் காரணமாக்கி தப்ப முடியாது. அதிகபட்சம் பதினாறு ஆண்டுகள் தான் எங்கள் ஆயுட்காலம். எனக்கு இப்போது பதினைந்து முடிகிறது. இருக்கும் வரை நான் ராஜாவாக இருக்க முடியாது. ஆனால் சிங்கமாக இருந்து விட வேண்டும்.



**மனிதர்களே! நீங்கள் எங்களிடம் கற்றுக் கொள்ள நிறைய இருக்கிறது.**

**அதில் அரசியலும் ஒன்று!**





# விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர்



விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர் எனும் செயற்திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வுகளை அபயம்,சிவபூமி, தூமி அமைப்புக்கள் இணைந்து நடாத்தி வருகின்றன. இதன் ஒரு அங்கமாக நடைபெற்ற ஓவிய கண்காட்சியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும், கலைநிகழ்வுகளும் யா/ வட்டு இந்துக் கல்லூரியில் சமூகநெறிக் கழகத்தின் ஊடாக 23.06.2023 நடைபெற்றது.



## யாழ்பாணத்திற்கு அதிக விமானங்களை இயக்குவதற்கு ஆர்வம் காட்டும் Alliance air india...



இந்தியாவின் விமான சேவை நிறுவனமான Alliance air indiaவுடன் இணைந்து யாழ் மற்றும் ரத்மலானை விமான நிலைய செயற்பாடுகளை அதிகரிப்பது தொடர்பான அலையன்ஸ் விமான அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் விமானங்களை அதிகரிப்பது மற்றும் யாழ்ப்பாணத்திற்கும் இரத்மலானைக்கும் இடையிலான தொடர்பை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆரயப்பட்டது. அலையன்ஸ் ஏர் இந்தியா குழு இந்த திட்டத்திற்கு விருப்பம் தெரிவித்ததுடன் மேலும் விமான நிறுவனம் பரிந்துரைகளை பரிசீலிக்கவும் ஒப்புக்கொண்டுள்ளது..

## பலாலி விமான நிலையம் விஸ்தரிப்பு




யாழ்ப்பாணம் விமான நிலையத்தின் ஓடுபாதையை விஸ்தரிப்பதற்கும் பயணிகள் முனையத்தை விரிவு படுத்துவதற்கும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. தற்போது காணப்படும் 900 மீட்டர் ஓடுபாதையை புனரமைத்து, புதிதாக 300 மீட்டர் ஓடுபாதையை இணைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக துறை முகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. அதற்காக 168 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சுழிபுரத்தில் ஆணிகள் உற்பத்தி



யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் தனியார் ஒருவரின் முதலீட்டில் ஆணிகள் உற்பத்தி தொழிற்சாலையொன்று திறக்கப்பட்டுள்ளது.
இத்தொழிற்சாலையானது கடந்த June-1 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.







# இலங்கையிலையே இரயில் பெட்டிகளை உருவாக்கவுள்ள நிறுவனம்..

ரோமானியன் மற்றும் S8 ரயில் பெட்டிகளை புத்தாக்கம் செய்யும் “தந்திரி நிறுவனம்” தெரிவிப்பு. தெமட்டகொடையில் அமைந்துள்ள தந்திரி நிறுவனத்தின் தொழிற்சாலையில் ரெமேனியன் மற்றும் s8ரயில் பெட்டிகள் புதிப்பிக்கப்பட்டு வருகிறது. இலங்கையின் பெறுமதிமிக்க ரயில் பயணிகளுக்கு சிறந்த மற்றும் உயர்தர ரயில் பெட்டிகளை வழங்குவதே எங்கள் நோக்கம் என குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது. எதிர்காலத்தில் 100% இலங்கையிலையே இரயில் பெட்டிகளை தயாரிக்கக்கூடிய திறன் எம்மிடமுள்ளது என்றும் தந்திரி நிறுவனம் தெரிவித்துள்ளது..









ஆச்சியை மருத்துவம் பார்க்க வந்த பரியாரியார் அய்யரின் தங்கை சரோஜா மடியில் பேச்சு மூச்சின்றி கிடக்கிறார். அங்கே தன் மகனுடன் வந்த பரியாரியார் மனைவி பரமுவும் அழுது கொண்டே பரியாரியாருக்கு மற்றப் பக்கம் வந்து இருந்து அழத் தொடங்கினாள். சரோஜாவினதும் பரமுவினதும் அழுகைச் சத்தம் அங்கே ஒரு துக்கம் நடந்துவிட்டதை ஊருக்கே சொல்லிவிடுவதாய் இருந்தது. ஊரவர்கள் ஆச்சிக்கு தான் ஏதோ நடந்துவிட்டதாக பேசிக் கொண்டார்கள். ஆனால் அங்கே ஆச்சி உடலில் சில அசைவுகள் ஏற்படத் தொடங்கின. ஆச்சியின் மூடிய கண்களில் இருந்து தாரை தாரையாக கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

எல்லா கண்களும் பரியாரியாரையே மொய்த்துக் கொண்டிருந்தாலும் ஆச்சியின் உடல் அசைவுகளை அய்யர் கவனித்து விட்டார். மெல்லச் சென்று ஆச்சியின் கைகளைப் பற்றினார். ஆச்சியின் பொக்கை வாய் எதையோ சொல்ல முனைந்தது. தன் காதை ஆச்சி வாய்க்கு கிட்ட கொண்டு போனார். ஆனால் சொல்வது விளங்கவில்லை. ஆனால் கண்களால் கண்ணீர் வந்து கொண்டே இருந்தது. கண்ணீரின் ஈரத்தால் ஆச்சியின் கண்கள் இளகியிருக்க வேண்டும்(மனமும் தான்). மெல்ல மெல்ல தன் கண்களை திறந்தாள். தரையில் தன் மகள் மடியில் படுத்திருந்த பரியாரையும் சரோஜாவையும் மாறி மாறி பார்த்தாள். ஆச்சியின் மனமும்

இளகிக் கொண்டிருப்பதை அய்யரால் உணர முடிந்தது.

அப்போது திடீரென ஆச்சியை சரோஜா ஒரு பார்வை பார்த்தாள். அப்பப்பா... ஆயிரம் கோபங்கள் நிறைந்த அக்கினிப் பார்வை அது. சிவனின் மூன்றாம் கண்ணும் தோற்று விடும். சரோஜாவின் அந்த பார்வையை ஆச்சியால் எதிர்கொள்ள முடியவில்லை. கண்களை மீள மூடி ஆச்சி அழுகையை தொடர்ந்தாள். உடனே தன் பார்வையை அய்யர் பக்கம் திருப்பினாள். அய்யராலும் அந்தப் பார்வையை எதிர்கொள்ள முடியவில்லை.


“எல்லாரின்ட வாழ்க்கையையும் நான் கெடுத்துட்டன்.” என ஆச்சி புலம்பத் தொடங்கிவிட்டாள். அய்யர் தடுத்தும் ஆச்சி புலம்புவதை நிறுத்தவில்லை. மரணப் படுக்கையில் எல்லோருக்கும் தாங்கள் செய்த தவறுகள் ஞாபகத்திற்கு வரும். அதனை நினைத்து வருந்தி, அந்த பாவங்களுக்கு பரிகாரம் தேட முனைவார்கள். இதனை சுடலை ஞானம் என்று சொல்வார்கள். அந்த சுடலை ஞானம் தான் இப்போது ஆச்சிக்கு வந்திருக்கிறது. ஆனால் இந்த சுடலை ஞானம் விடலை ஞானமாக எப்போதோ வந்திருந்தால் சரோஜாவினதும் பரியாரியாரினதும் வாழ்க்கை அவர்கள் நினைத்தது போல் அமைந்திருக்கும். ஆம்! உங்கள் ஊகம் சரிதான். சொல்லாமல் விட்ட இன்னொரு காதல் கதையை சொல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது.

அய்யர் வீட்டு ஒரே பெண் வாரிசு சரோஜா. செல்லமாக வளர்ந்தவளை விட்டுப்பிரிய மனமின்றி வீட்டோடு மாப்பிள்ளை பார்த்தனர் வீட்டுக்காரர். இதற்கு மேலும் தாமதித்தால் நிலைமை எல்லை மீறிப் போய்விடும் என்பதை அறிந்து தனக்கும் பரியாரியாருக்குமான காதலை வீட்டுக்காரர் முன்னிலையில் போட்டுடைத்தாள். அப்போதும் நிலைமை எல்லை மீறித்தான் போய் இருந்தது. அப்போது மட்டுமல்ல எப்போது அவள் சொல்லி இருந்தாலும் அய்யர் வீட்டுக்காரர் சம்மதித்திருக்கப் போவதில்லை. வீட்டிற்குள்ளேயே வளர்ந்த செல்லப்பிள்ளை என்பதால் வெளியில் பாதீனியமாய் பரவியிருந்த சாதீய ஏற்றத் தாழ்வுகளை அவள் அறிந்திருக்கவில்லை. பள்ளியிலும் சாதிகள் இல்லையடி பாப்பா என்று தான் சொல்லித்தந்து இருந்தார்கள். அவ்வாறு சொன்ன பாரதியின் படம் வீட்டிலும் இருந்தது. ”ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது” என்று அவளுக்கு தெரிந்திருக்கவில்லை.

தன்னைப்போல அசைவம் சாப்பிடாதவராய், தன் மனதுக்கு பிடித்தவராய் அமைந்துவிட்ட பரியாரியாரை காதலித்து விட்டாள். சாதிப் பிரச்சனை வருமென தெரிந்தும், சரோஜாவின் அழகிலும், குழந்தைத்தனத்திலும் தன்னை இழந்த பரியாரியாரும் காதலிக்க தொடங்கிவிட்டார். ஆனால் என்ன செய்வது அய்யர் வீட்டில் சிவப்புக் கொடி காட்டி விட்டார்கள். சரோஜா எவ்வளவோ முயன்றாள். முடியவில்லை. சரோஜாவின் அம்மாவான ஆச்சி இறுதிக்கட்ட

ஆயுதமாக தன் உடம்பெல்லாம் பெற்றோல் ஊற்றி, நெருப்புப் பெட்டியை சரோஜாவிடம் கொடுத்து, தன்னை எரித்துவிட்டு விரும்பியவருடன் போகுமாறு கூறினாள். இப்படி ஒரு சம்பவத்தை எந்த மகளால் செய்ய இயலும். வீட்டவர்கள் காட்டியவரே சரோஜாவுக்கு வீட்டுக்காரர் ஆனான். சரோஜா தனது வீட்டிற்கு மனைவியாக வரும் போது காதலின் நினைவாக நடவேண்டும் என வாங்க வைத்திருந்த மகிழ மரத்தின் கன்றை அவள் நினைவாக தன் வீட்டு முற்றத்தில் பரியாரியார் நட்டார். சிறிது காலத்தில் பரியாரியார் வீட்டவர்கள் பார்த்த பரமேஸ்வரியை தன் காதல் கதை அனைத்தையும் சொல்லி கரம் பிடித்தார்.

வெளிப்படையாக எல்லாவற்றையும் சொல்லி நடந்த திருமணம் என்பதால் பரியாரியார் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருந்தது. பரமு பரியாரியாரை புரிந்துகொண்ட மனைவியாக இருந்தாள். ஆனால் சரோஜா வாழ்க்கையோ அவளுக்கு துன்பங்களையே தந்தது. சரோஜாவின் கணவன் பெயரளவிலேயே அய்யர். களவாக மாமிசம் மட்டுமல்ல மதுவும் அருந்துவதும் சரோஜாவுக்கு தெரியவந்தது. இதைப்பற்றி அவள் கணவனை கேட்கும் போதெல்லாம் "



இழி சாதியை காதலிச்ச நீ எல்லாம் இதை கதைக்க கூடா. உன்ட குடும்ப மானத்தை காப்பாத்தினவன் நான்." என்பதைச் சொல்லி அவளை மட்டுமல்ல சரோஜா வீட்டவர்களையும் அடக்கி வந்தான். கௌசல்யா பிறந்து மூன்று மாதங்களில் லண்டன் கோயில் ஒன்றில் பூசைக்கு வரச் சொன்னதாகவும், நல்ல சம்பளம் என்றும் போனவன்தான். திரும்பி வரவே இல்லை. அவனோடு இருப்பதை விட இல்லாமல் இருப்பது நல்லம் என்று சரோஜாவும் பேசாமல் விட்டுவிட்டாள். ஆனால் ஆச்சிக்குத்தான் பெரிய கவலை. அதை வெளிப்படுத்தினால் தன் தவறையும் ஒப்புக்கொள்ள வேண்டி வருமென்பதால் அந்த கவலையை புதைத்தே வைத்திருந்தாள். ஆனால் தன்னை காப்பாற்றிய பரியாரியார் பேச்சு மூச்சின்றி தன் மகளின் மடியிலேயே படித்திருப்பதை பார்த்ததும் ஆச்சியால் கட்டுப்படுத்த முடியவில்லை. கவலைகள் கண்ணீராய் பெருக்கெடுத்தன.

தன் சக்தி முழுவதையும் திரட்டி ஆச்சி கதைக்க முயன்றாள். அவள் முயன்றால் முடியாதது இருக்கமா? கதைத்தாள். பரியாரியார் மருந்து வேலை செய்தது.

"என பிள்ளை சரோ... என்னை மன்னிச்சிடு... உன்ட வாழ்க்கையை சீரழிச்சுப் போட்டன்... எனக்கெல்லாம் நல்ல சாவே வராது..."

ஆச்சி தட்டுத்தடுமாறி அழுதழுது சொல்லி முடிக்கவில்லை. பரியாரியார் தலையை மெல்ல நிலத்தில் கிடத்தி

விட்டு, வெகுண்டெழுந்தாள் சரோஜா.

“என்னனை சொல்றாய்? நல்ல சாவே வராதோ.. ஹா... ஹா... சாகப்போறன்... சாகப்போறன்... என்டு சொல்லியே என்னை வெருட்டி என்ட வாழ்க்கையை நாசமாக்கிப் போட்டு, இப்ப திருப்பி என்ன நாடகம் போடுறா... வாழ்ந்து முடிச்ச உனக்கான்டி வாழவே தொடங்காத என்ட வாழ்க்கையை மாத்தச் சொன்னியே? சாதி சாதி என்டு உன்ட சாதீல வந்த உன்ட மாப்பிள்ளை என்ன செய்தான் என்டு பாத்தனீ தானே! என்ன பாதீலயே விட்டுட்டு போட்டான். ”

இவ்வளவு வருசமா மனசுக்க வைச்சிருந்த கோபத்தை எல்லாம் கொட்டித்தீர்த்தாள் சரோஜா. ஆச்சியால் பதில் பேச முடியவில்லை. தன்னை நியாயப்படுத்த ஆச்சியிடம் அழுகையைத் தவிர எதுவுமே இல்லை. இந்த நேரத்தில் பரதன் பரியாரியார் நாடியைப் பிடித்து பார்த்து விட்டு, வாய் மீது வாய் வைத்து செயற்கை சுவாசம் கொடுத்துக் கொண்டிருந்தான். பரமு பரியாரியார் கால்களில் தன் உள்ளங்கையால் இறுக தேய்த்துக் கொண்டிருந்தாள்.

“நான் செய்ததெல்லாம் மன்னிக்கவே முடியாத பாவம். எனக்கு நரகம் தான் கிடைக்கும். என்ட மகளின்ட வாழ்க்கையை நானே நாசமாக்கிட்டனே.”

என விம்மி விம்மி அழுதாள் ஆச்சி. சரோஜாவும் விடவில்லை.

“நடிக்காத அம்மா.. சாதீ வெறி பிடிச்சு என்னத்த கண்டாய்? உன்ட சாதிக்காரரா உன்ன காப்பாத்தினவை? சாதீ வெறியில் யாரை வேண்டாமென்டியோ அவர் தானே உன்னை காப்பாத்தினது.”

“ஓமடி... நீ சொல்றதொல்லாம் சரி. எனக்கு விளக்குது. சாதிக் கொழுப்பில திரிஞ்சு என்ட மகளை வாழாவெட்டியாக்கினது தான் மிச்சம். நான் நடிக்கேல பிள்ளை. சாதி பார்க்கிற தப்பு. எனக்கு விளக்குது.”

“ஹா... ஹா... உனக்கு விளக்குதா? நல்லா சொல்லுவாய். நான் நம்ப மாட்டன்.”

“சாவைப் பாத்திட்டு வந்திருக்கிறன் பிள்ளை. சத்தியமா சொல்றேன். என்ன செய்தால் நம்புவாய்?”

“இந்தா... உன்ட பேத்தி... அய்யர் வீட்டு வாரிசு... கௌரவம்... கௌசல்யாவை இன்னொரு சாதீல கல்யாணம் பண்ணி கொடுப்பியா..?”

சரோஜா இப்படி கேட்பாளென்று யாருமே எதிர்பார்க்கவில்லை. ஆச்சி மௌனமானாள். கண்ணீர் மட்டும் வந்து கொண்டே இருந்தது. சரோஜா விடவில்லை.

“பாத்தீயா அம்மா. பம்மத் தொடங்கீட்டாய். நீ எல்லாம் மாறவே மாட்டாய்.”

“நல்ல மாப்பிள்ளையா இருந்தா கட்டிக் கொடுக்கலாம் பிள்ளை”

ஆச்சி இப்படி சொல்வாள் என்று அந்த ஊரில் யாரும் கனவிலும் கற்பனை செய்திருக்க மாட்டார்கள். அய்யர் விறைத்துப்போய் பார்த்துக் கொண்டிருந்தார். சரோஜா விட்டுவிடவில்லை. ஒரு முடிவோடே தொடர்ந்தாள்.

“நல்ல மாப்பிள்ளையா? ஹா.. ஹா... நீங்க பாத்தத விடவா....?”

“சரி.. நீயே இந்த முறை உன்ட மகளுக்கு மாப்பிள்ளையை பார். நான் உயிரோட இருந்தா நானே நடத்தி வைக்கிறன்.”

சரோஜா எதிர்பார்த்த பதிலை ஆச்சியிடமிருந்து பெற்றுக் கொண்டாள். இப்படி ஒரு உதவி செய்ய சரோஜாவுக்கு ஒருவரும் கிடைக்கவில்லை. ஆனால் கௌசல்யாவுக்கு சரோஜா கிடைத்திருந்தாள். பரதனின் சிகிச்சையாலோ என்னவோ பரியாரியாரும் மெல்ல மெல்ல இயல்பு நிலைக்கு வந்தார்.

இன்று நடந்ததில் எது உண்மை, எது நாடகம் என்று கௌசல்யாவுக்கு எதுவுமே புரியவில்லை. உண்மைக் காதலை நிலைநிறுத்த சில பொய்கள், சில நாடகங்கள் தேவைப்படும். அவை சதியல்ல! லீலை! காதல் லீலை! தமிழ்ச் சாதி பாகுபாடுகளால் பிரிந்து போன இரு காதலர்கள் தங்கள் பிள்ளைகளின் காதலை சேர்த்து வைக்க நடத்திய நாடகத்தில் சிலர் தெரிந்தே நடிகர்களாக இருந்திருக்கிறார்கள். பலர் தெரியாமலே நடித்திருக்கிறார்கள். அது யார் யார் என்ற குழப்பம் எல்லோருக்குமே இருக்கிறது. குறிப்பாக கௌசல்யாவுக்கு. பரதன் மேல் தனக்கு வந்த காதலிலேயே அம்மாவின் பங்கும் இருக்குமோ என்று அவள் ஐயப்பட்டாள். ஆனால் அதைப்பற்றி அவள் ஆராய வெளிக்கிடவில்லை. பரதனுடனான தன் காதல் கல்யாணம் எனும் அங்கீகாரத்தை பெறும் ஆனந்தத்தை அனுபவிக்கவே அவளுக்கு நேரம் போதுமாக இருந்தது.

பரியாரியாருக்கு காதலிக்கும் போது சரோஜா கொடுத்த காதல் பரிசான அந்த மகிழ மரத்தின் கொப்பு முறிந்த இடத்தில் இருந்து புதிதாக ஒரு கிளை முளைவிட்டிருந்தது. பரியாரியார், சரோஜா காதல் பரதன், கௌசல்யா வழியே நீள்கிறது...

**(முற்றும்)**



தரை இறங்கி வந்த மேக வெண்ணிலா
நீயே தான் பூமி என்றதோ

# பாட்டுப் பாடவா...?

குறுஞ்சிறகினில் பெருமலையினை
ஏன் ஏற்றினாய்
சுருங்கிடும் வானை காட்டினாய்
வெறும் குமிழியில் புது நிறங்களை
ஏன் ஊற்றினாய்
இருண்டிடும் உலகை தீட்டினாய்

எறும்புகள் நசுங்கும் போதிலும்
உயிருடன் தத்தி போகுதே
இருதயம் நொறுங்கும் போதிலோ
உயிர் எனை விட்டு போகுதே
நீ எந்தன் கண்ணீர் என்று ஏன் ஆகினாய்

தரை இறங்கி வந்த மேக வெண்ணிலா
நீயே தான் பூமி என்றதோ
உன் நெஞ்சில் நீந்தி வந்த காதல் வெண்ணிலா
மீண்டும் மேலேறி சென்றதோ

ராமன் செய்த போரே
சீதைக்காக தானே
ஆனால் என்ன போர் இது
உணர்வே இல்லாமல் ஆனேனோ ஆயுதமாய்
உயிரே இல்லாமல் நின்றேனோ காவலனாய்
நீ எந்தன் கண்ணீர் என்று ஏன் ஆகினாய்



படம் : சீதா ராமம்
பாடகர் : அரவிந்த் அன்னெஸ்ட்
இசை அமைப்பாளர் : விஷால் சந்திரசேகர்
பாடல் ஆசிரியர் : மதன் கார்க்கி

# வட்டுக்கோட்டையில் பாட்டா உற்பத்தி நிலையம்

வட்டுக்கோட்டை கிழக்கு சித்தங்கேணியில் அந்திரான் ஜனசக்தி தோற்பொருள் உற்பத்தியாளர் சங்கத்தில் காலணிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இவை உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையின் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் ஈடுபாட்டுடனும் முயற்சியிலும் உற்பத்திகள் இடம்பெறுகின்றது.

இவர்களது உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க வர்த்தக நிலையங்கள் இவற்றினைக் கொள்வனவு செய்து விற்பனை செய்வதன் மூலம் உற்பத்தியும் பணியாளர்களையும் அதிகரிக்க முடியும் என்பதுடன் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு பொருளாதார பிரச்சினைக்கும் தீர்வாக அமையும். வெளிநாட்டவர்கள் கூட ஓடர்செய்து பெற்றுக்கொள்ள முடியும். (T.P - 0772187299, 0764005535)













## உருண்டை வடிவ முட்டை



ஆஸ்திரேலியாவை சேர்ந்த ஜாக்குலின் பெல்கேட் என்பவர் இன்ஸ்டாகிராமில் பகிர்ந்துள்ள வீடியோவில் உருண்டை வடிவ முட்டை குறித்த காட்சிகள் உள்ளது. அங்குள்ள வூல்வொர்த் பகுதியில் உள்ள ஒரு மளிகை கடையில் பெண் ஒருவர் 'ஷாப்பிங் செய்ய சென்றுள்ளார். அப்போது அங்கு தான் உருண்டை வடிவ முட்டையை கண்டுள்ளார். பார்ப்பதற்கு வித்தியாசமாக தெரிந்ததால் உடனே அந்த முட்டையை வாங்கிய அவர் இதுபோன்ற வடிவில் வேறு எங்காவது முட்டைகள் இருக்கிறதா என கூகுளில் தேடிப்பார்த்துள்ளார். அப்போது 10 லட்சத்தில் ஒன்று தான் இதுபோன்ற வடிவில் இருக்கும் என தெரியவந்துள்ளது. கடைசியாக இது போன்று கிடைத்த ஒரு முட்டை இந்திய மதிப்பில் ரூ.1.14 லட்சத்திற்கு விற்பனையாகி இருப்பது தெரியவந்தது.

## ரூபிக் கியூப்பில் உலக சாதனை

கடந்த 11ம் தேதி அமெரிக்காவின் கலிபோர்னியாவில் 3ஒ3ஒ3 ரூபிக்ஸ் கியூப் புதிருக்கு மிக வேகமாக தீர்வு கண்டு, “ஸ்பீட்கியூபிங் லெஜண்ட்” என்றழைக்கப்படும் அமெரிக்காவைச் சேர்ந்த 21 வயதான மேக்ஸ் பார்க் உலக சாதனை புரிந்தார். ஹங்கேரி நாட்டை சேர்ந்த கட்டிடக்கலை பேராசிரியர் எர்னோ ரூபிக் என்பவர் 1974ம் வருடம், ”மேஜிக் கியூப்” என்று அழைக்கப்படும் ஒரு புதிர் விளையாட்டை கண்டுபிடித்தார். இது உலகம் முழுவதும் பிரபலமான, மூளைக்கு சவால் விடும் ஒரு விளையாட்டாக பார்க்கப்படுகிறது. பல்வேறு நிறங்களை உள்ளடக்கிய கன சதுர கட்டங்களை ஒரு சேர ஒழுங்குபடுத்துவதே இந்த ரூபிக் கியூப் விளையாட்டு. மாறி மாறி உள்ள கனசதுர கட்டங்களை வேகமாக ஒழுங்குபடுத்துவதில் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த, அனைத்து வயதினரும் சாதனைகளை படைத்துவருகின்றனர்.















# யாழில் நெசவுத் தொழிற்சாலை

யாழ்ப்பாணம் கோண்டாவிலில் நெசவு மின்தறி இயந்திரங்கள் மூலம் உடைகள் தயாரிக்கப்படும் தொழிற்சாலை ஒன்று யாழ்.மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கமாக இயங்குகின்றது.

இங்கு சாறி, வேட்டி, சறம், பெட்சீட், கைக்குட்டை , கட்டில்களுக்கான துணிகள், துவாய் என பல உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலையால் இங்கு பல கோடிக்கணக்கு பெறுமதியான இயந்திரங்கள் தற்போது இயக்கமுடியாத நிலையிலும் ஒரு பகுதி இயந்திரங்கள் மூலம் சில பணியாளர்களை இணைத்து உற்பத்தி செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் துணிகள் வைத்தியசாலைகள், அரச தனியார் திணைக்கள ஊழியர்களுக்கு என வழங்கப்பட்டு வருகின்றன.

தொழில்துறையில் உள்ள புலம்பெயர்ந்தோர் என வணிகத்துறையினர் இதில் முதலிட்டால் இந்த பலருக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதுடன் தொழிற்சாலையினை மேலும் வளர்ச்சிபெறச் செய்ய முடியும்.









# கதிர்காம கந்தன் திருவிழா - 2023









# பாடசாலைகளில் விழுமியக் கல்வியின் முக்கியத்துவம்

வ. டியனி

மனித வாழ்வை செம்மையானதாகவும் அர்த்தமுள்ள வகையிலும் வாழ்வதற்கு மனித விழுமியங்கள் அறக்கருத்துக்கள் என்பன துணை செய்கின்றன. விழுமியம் என்பது தனி மனித வாழ்விலும், சமூக வாழ்விலும் இன்றியமையாத ஒன்றாகும். மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை விழுமிய பண்புகள் நம் வாழ்வில் பயணிக்கின்றது.குறிப்பாக மனித விழுமியங்களான அன்பு, பரிவு, இரக்கம், நேர்மை, ஒழுக்கம், உதவிசெய்தல், அகிம்சை என பல உள்ளன.

“கல்வியில் கிடைக்கப்பெறும் நன்மை யாதெனில் நல்ல மனிதனை உருவாக்குவது மட்டுமல்லாமல் அவர்களை நல்ல முறையில் செயலாற்றவும் செய்கிறது.”


என்ற கிரேக்க மெய்யியலாளர் பிளேட்டோவின் கருத்திற்கு இணங்க விழுமியப் பண்புகளை வளர்ப்பதிலும், விழுமிய கல்வியை கோட்பாட்டு ரீதியிலும் செயற்பாட்டு ரீதியிலும் வழங்குவதிலும் பாடசாலையின் வகிபங்கு மிக முக்கியமானதாக காணப்படுகின்றது.

இன்றைய மாணவர்களே நாளைய சமூகத்தை ஆள்பவர்களாக வளரப்போகின்றனர். ஒரு பிள்ளை பிறந்து வளர்ந்து முதலில் சந்திக்கின்ற சமூகம் பாடசாலை சமூகமேயாகும். அது மட்டுமன்றி தமது வாழ்க்கைக்குரிய பண்புகளையும் எதிர்காலத்திற்கான கல்வியையும் முறையாக கற்றுக் கொள்கின்ற தளமும் பாடசாலையே ஆகும். ஒரு பிள்ளை பாடசாலை சென்றதும் அவனுக்கு அனைத்தும் ஆசிரியர்களாகி விடுகின்றனர். இவ் ஆசிரியர் மாணவருக்கு வெறுமனே

ஏட்டுக்கல்வியை அல்லது புத்தக கல்வியை மட்டும் வழங்க முடியாது வழங்கவும் கூடாது.

தற்காலத்தில் தொழிநுட்பம் ஆட்கொண்டுள்ள உலகில் மாணவர்களை விழுமியத்தில் வளரச் செய்வது என்பது மிகவும் கடினமான செயலே ஆகும். ஆனால் இப்பணியை முழுமையாக பேணிக்காத்து முழுமையாகவும் கட்டுப்பாடுடனும் வழங்கக்கூடிய அதிகாரமளிக்கப்பட்ட ஒரே இடம் பாடசாலையே ஆகும். பாடசாலையில் கற்கும் நல்ல பழக்கங்களினாலேயே மாணவர்கள் சமூகத்திற்கு சென்ற பிறகு செயற்படுத்தப் போகின்றனர். அதனால் பாடசாலையில் வழங்கப்படும் விழுமிய பண்பு மிக முக்கியமானதே.

எமது கல்வி வரலாற்றை பார்த்தால் ஆரம்ப காலங்களில் குருகுலம் சென்று கல்வி கற்று வந்தனர். அக்காலத்தில் மாணவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாவும். குரு வினுடைய சொல்லை தெய்வ வாக்காகவும் பணிந்து கல்வி கற்கும் மாணவர்களாகவும் இருந்தனர். உதாரணமாக ஏகலைவனைக் கூறலாம். ஆனால் இன்றைய காலகட்டத்தில் நாகரீகமும் தொழிநுட்பமும் வளர்ச்சியடைந்த



காலத்தில் சமூகம் மற்றும் மாணவர்களின் பழக்கவழக்கங்கள் மற்றும் செயற்பாடுகளும் மாற்றமடைந்துள்ளன. தற்காலத்தில் மாணவர்களின் வாழ்க்கைமுறை முற்றாக மாற்றமடைந்துள்ளதை காணலாம்.

எல்லா மாணவர்களுக்கும் குடும்பச் சூழல் வளமானதாக அமைவதில்லை. வறுமை, பெற்றோர்களை இழந்த நிலை, கூட்டுக் குடும்பங்கள் தனிக்குடும்பமாக மாறிவிட்டன. பெற்றோருக்கு வேலைப் பளு, தொலைபேசி, தொலைக்காட்சி, இணையம் பாவனை, தகாத நண்பர் கூட்டம், தந்தையின் அறிவுரை மற்றும் வழிகாட்டல், தாயின் அரவணைப்பு என்பன சரியாக கிடைக்காமை என பல குடும்ப சூழ்நிலைகளுடன் அனேக மாணவர்கள் பாடசாலைக்கு வருகின்றனர். இவ்வாறான பின்புலங்களை கொண்ட மாணவர்களாலும் சமீப காலமாக நடைமுறை பாதிப்புக்கள் பல ஏற்படுகின்றன. மாணவர்களிடத்திலே போதைப்பொருள் பாவனை, மாணவர்கள் மீதான துஸ்பிரயோகங்கள், கீழ்படியாமை, பாடசாலைக்கு எதிரான வன்முறைகள் என்பன அதிகரித்துவிட்டன என்றே சொல்லாம்.

இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படும் போது அவற்றில் இருந்து எமது சமூகத்தை மாணவர்களை பாதுகாக்கும் வகையில் சில வழிமுறைகள் கையாளப்படுகின்றன. ஒவ்வொரு ஆசிரியரும் பாடசாலையில் தாம் கற்பிக்கும்

மாணவர்களை சிறந்த நற்பிரஜையாக உருவாக்க இலட்சியத்துடனும் அர்ப்பணிப்புடனும் சேவையாற்ற வேண்டும். விழுமியப் பண்புகளை கலைத் திட்டத்தின் ஊடாகவும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் மூலமாகவும் வளர்க்க தேவையான தேர்ச்சிக்களை புத்தாக்கம் செய்ய வேண்டும். மேலும் ஆசிரியர் மட்டுமல்லாது பெற்றோர்களுக்கும் விழுமிய பண்புகளை மாணவர்களிடையே ஏற்படுத்தும் பங்கு மிக முக்கியமானதாகும்.

அதுமட்டுமன்றி தத்தமது சமய ஒழுகலாறுகள் மற்றும் சமய கருத்துக்களை,அற விழுமியங்களை பிள்ளைகளின் வாழ்க்கை செம்மையாக்கும் வகையில் வழங்க வேண்டும். மேலும் பாடசாலைகளில் விழுமிய பண்புகளை பேணி ஒழுகும் பிள்ளைகளை பாராட்டும் விதமான ஊக்குவிப்புக்களை வழங்க வேண்டும். அதே போல் நெறி பிறழ்வான நடத்தைகளை கண்டித்தும் அதன் ஆபத்தினை உணர்த்தி நற்பண்புகளை அவர்களிடம் விதைக்க வேண்டும்.

ஒருவன் நல்ல விழுமிய பண்புகளை கொண்டிரா விட்டால் அவன் எவ்வளவு கற்றாலும் அவன் கற்ற கல்வி பூச்சியமே. அதேவேளை வாழ்வில் அவர் நல்ல விழுமியப்பண்புகளை பின்பற்றி வாழ்வாரேயானால் உலகம் அவரை போற்றும். அதை உதாரணமாக்கி தம் வாழ்வை வாழ்ந்த பெரியாளர்களாகிய அப்துல்கலாம், அன்னை தெரேசா, ஜவகர்லால் நேரு போன்றோர் பற்றிய அறிவையும் விழிப்புணர்வுகளையும் மாணவர்களுக்கு வழங்க வேண்டும். மேலும் கல்வியின் மகத்துவத்தையும் மனித வாழ்வின் உன்னத தன்மையையும் விளக்கி கற்றுக்கொடுக்க வேண்டும்.

உதாரணமாக :- “அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது மற்றும் ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்”. அது மட்டுமன்றி உலகில் விழுமியப் பண்புகளை வழங்குவதில் சமய புனிதநூல்கள் மிக முக்கியமாவை என்றே கூற வேண்டும். இவை மனித ஒழுக்க விழுமியங்களுக்கு தனி சிறப்புரிமையே கொடுத்துள்ளன. கிறிஸ்தவர்களது திருவிவிலியம், இந்துக்களின் வேத ஆகமங்கள், இஸ்லாமியர்களின் திருக்குறான், பௌத்தர்களின் திரிப்பிடம் என அனைத்து புனித நூல்களுமே நாம் வாழ்நாளில் கடைப்பிடிக்க வேண்டிய விழுமியப் பண்புகளை மிக அழகாக கூறியுள்ளன. இவற்றை எம் மாணவர்கள் பாடசாலையில் ஒரு பாடவிதானமாக கற்கின்றனர்.

அது மட்டுமன்றி பாடசாலையில் சமத்துவம், சகோதரத்துவம் என



எல்லோரும் சமமானவர்கள் என வலியுறுத்தும் விதத்திலாக சீருடை அணிந்து செல்கின்றனர். ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் காலை கூட்டத்துடனான சமய ஆராதனைகள் விசேடமாக நடைபெறுகின்றன. பெரியோரை மதித்தல் மற்றும் உதவி செய்தல், அன்பாக பழகுதல், இயற்கையை பேணுதல், ஏழைகளுக்கு உதவுதல் ஒழுக்கமாக வாழுதல் என விழுமிய கருத்துக்களை கூறும் பாடத்திட்டங்கள் உள்ளடக்கியதாக பாடப்புத்தகங்கள் கல்வி அமைச்சினால் இலவசமாக அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன.
உதாரணமாக:- ஆத்திச்சூடி, நன்னூல், குறுந்தொகை, திருக்குறள் போன்ற அறக் கருத்துக்களை கூறும் இலக்கியங்கள் தமிழ் பாடத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.நல்ல விழுமியம் கூறும் சமய பாடநூல்களும் வழங்கப்படுகின்றன.

அது மட்டுமன்றி எமது நாட்டை பொறுத்தவரையில் சமயக்கல்வி மாத்திரமே கலைதிட்டத்தில் புகுத்தப்பட்டுள்ளது. விழுமிய கல்வியோ, பாலியல் ரீதியான கல்வியோ கற்பிக்கப்படுவது இல்லை. ஆனால் இந்தியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் சமய கல்வி இல்லை. மாறாக விழுமிய கல்வி மட்டுமே உண்டு. இது எங்கள் மதம் சிறந்தது உங்கள் மதம் சிறந்தது அல்ல என்ற வேறுப்பாட்டை விதைத்து விடும். ஆனால் விழுமிய கல்வி மட்டுமே சிறந்த சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நற்பண்புகளை போதிக்கின்றது.

மாணவர்களிடையே விழுமியத்தை, விழுமிய பண்புகளை ஏற்படுத்தும் ஆசிரியர்கள் வெறுமனே கற்றுக் கொடுப்பதில் மாத்திரம் நின்று விடாமல் விழுமிய பண்புகளை தம்வாழ்வில் செயலில் முன்மாதிரியாக வாழ்ந்து காட்ட வேண்டும். ஆசிரியர்கள் மனவெழுச்சி, சமூக அக்கறை தேசிய நலன்கள் மற்றும் நவீன மயமாதலுக்கு ஏற்ற வகையில் உலகத்தோடு ஒத்து வாழ்பவர்களாக நிகழ வேண்டும்.

“மனிதன் யாருமே தவறு செய்வதில்லை தவறு செய்ய காரணம் அவன் சரி, பிழை பற்றி அறிந்திராத காரணமே.” என்று கூறும் ஒழுக்கவியலின் தந்தை சோக்ரட்டீஸ் கருத்துக்களுக்கு அமையவே மாணவர்களும் அவர்களுக்கு சமூகத்திற்கு ஏற்ற விழுமிய பண்புகளையும் அறக் கருத்துக்களையும் விழுமியக் கல்வியின் அவசியத்தையும் விளக்கி கூறி நாட்டிற்கும் சமூகத்திற்கும் நற்பிரஜைகளை பாடசாலைகள் உருவாக்க வேண்டும்.



இன்றைய கால கட்டத்தை எடுத்துக் கொண்டால் அனைத்து பெற்றோரும் தமது பிள்ளைகள் வைத்தியர், பொறியியலாளர் என உயர் பதவிகளை வகிக்க வேண்டும் என நினைக்கிறார்களே தவிர தம் பிள்ளை சிறந்த ஒழுக்கமுள்ள பிள்ளையாக வளர்கிறானா என அவதானிப்பது குறைந்து கொண்டு செல்கின்றது. அந்த நிலை மாற்றமடைந்து பாடசாலைகள் வெறுமனே பரீட்சைகளுக்கு மாத்திரம் மாணவர்களை தயார்படுத்தும் நிறுவனமாக அல்லாமல் சிறந்த மனிதனை உருவாக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

இப்பணியை ஆசிரியர்களும், அதிபர்களும், பாடசாலை, சமூகம் மற்றும் பெற்றோரும் பொறுப்பாக அன்றி தமது கடமையாக மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் எமது நாட்டில் வன்முறையற்ற, போதைப்பொருள் பாவனையற்ற துஷ்பிரயோகங்களற்ற ஒற்றுமையும் நல்லிணக்கமும் மிக்க சமூகத்தை விருட்சமாக உருவாக்க விழுமிய கல்வியை பாடசாலைகளில் வித்தாக இட்டு ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க முயற்சி எடுப்போம்.

*****

# முன்மாதிரியான செயற்பாடு

கிளி/செல்வாநகர் அ.த.க. பாடசாலை மாணவர்களின் முன்மாதிரியான செயற்பாடு பலரையும் மகிழ்ச்சி அடைய வைத்துள்ளது. கடந்த இரு வருடங்களாக க.பொ.த.(சா/த) பரீட்சை எழுதிய மாணவர்கள் இறுதி நாள் பரீட்சை முடிவடைந்த பின் பாடசாலைக்கு வந்து அதிபர், ஆசிரியர்களைச் சந்தித்த பின் பாடசாலையை வணங்கி நன்றி செலுத்தியுள்ளார்கள். மாணவர்களின் நடத்தைக்கோலங்கள் விமர்சனத்திற்குள்ளாகி வரும் இன்றைய காலத்தில் தொடர்ச்சியாக இருவருடங்களாக மாணவர்களின் இந்த நன்றியுணர்வு மிக்க செயற்பாடு பாராட்டிற்குரியது. இவர்களை நெறிப்படுத்தும் அதிபர் ஆசிரியர்களுக்கும் தூமியின் அன்பு வணக்கங்கள். ஏனைய பாடசாலைகளிலும் இவ்வாறான நல்ல பழக்கவழக்கங்களை மாணவர்கள் பின்பற்ற வழிவகை செய்ய வேண்டும்.






# முடிவுக்கு வந்த தேடுதல் வேட்டை




அட்லாண்டிக் கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பல் அருகே கடந்த ஞாயிற்றுக்கிழமை காணாமல் போன OceanGate Titan என்ற நீர்மூழ்கி கப்பலின் குப்பை களங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக அமெரிக்க கடலோர பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் காணாமல் போன OceanGate Titan நீர்மூழ்கிக் கப்பலில் இருந்த ஐந்து பேரும் நீருக்கடியில் வெடித்துச் சிதறிய பேரழிவு சம்பவத்தில் இறந்தனர் என அமெரிக்கா கடலோர காவல்படை அதிகாரி ஒருவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். நீர்மூழ்கி கப்பலின் வெடிப்பு இடிபாடுகள் ஒத்துப்போகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து காணாமல் போன நீர்மூழ்கி கப்பலுக்கான பாரிய தேடுதலையும் முடிவைக் கொண்டு வந்தனர்.

காணாமல் போன நீர்மூழ்கி கப்பலை கண்டுபிடிப்பதற்காக பல்வேறு நாடுகளை சேர்ந்த கப்பல்கள், விமானங்கள் மற்றும் நீர்மூழ்கி வாகனங்கள் போன்றவை களமிறக்கப்பட்டு தேடுதல் வேட்டை மிகத் தீவிரமாக நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

# பூமிக்கு அப்பால் வளர்ந்த முதல் பூ



விண்வெளியில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஜின்னியா ரக செடியை நாசா விஞ்ஞானிகள் நட்டு வளர்த்தனர். இந்தக் குறிப்பிட்ட பரிசோதனையானது 2015இல் நாசா விண்வெளி வீரர் ஜெல் லிண்ட்கிரெனால் தொடங்கப்பட்டது. இதன் பூ எப்போதோ மலர்ந்துவிட்ட பொழுதும், இரண்டு நாட்களுக்கு முன் நாசாவின் உத்தியோகபூர்வ இன்ஸ்டாகிராமில் மீள் பதிவு செய்யப்பட்டது. இதன் காரணமாக, செம்மஞ்சள் வண்ணத்தில் மலர்ந்துள்ள இந்த ஜின்னியாதான் பூமிக்கு அப்பால் மலர்ந்த முதல் மலர் என மீண்டும் வைரலாக ஆரம்பித்துள்ளது.

கற்சிலைமடு தாரு

# என்ரை ஐயோ...!

(சிறுகதை)



அன்று வெள்ளிக்கிழமை. நேரம் ஏழு மணியிருக்கும். ஜன்னலினூடாக வந்த சூரியக் கதிர்கள் என்னைச் சூடேற்றி எழுப்பிக்கொண்டிருந்தன. தூக்கம் கலைந்து எழுந்தேன். கண்களைக் கசக்கிக்கொண்டு வானை நோக்கியபடி வெளி யேறினேன். நீலம் படர்ந்திருந்த வானத்தில் பறவைகள் ஆங்காங்கு பறந்துகொண்டிருந்தன. குருவிகளின் கீச்சிடும் சத்தம் என் காதுகளை மேலும் இனிமையாக்கியது. விவசாயிகள் மாட்டு வண்டில்களில் தத்தம் வயல்களுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். வேறு தொழிலுக்குச் செல்வோர்களும் தங்கள் பணிகளின் நிமித்தம் எங்கோ பயணித்துக் கொண்டிருந்தார்கள். பாடசாலை மாணவர்கள் நடந்தும், சைக்கிள்களிலும் பள்ளிக்குச் செல்லும் காட்சிகளும் தென்பட்டன. பலர் பேருந்தின் வருகைக்காகப் பேருந்து நிலையத்தில் குழுமி நின்றனர். அந்நிகழ்வுகளைப் பார்த்து இரசித்தபடி என் கடமைகளைச் செய்யப் புறப்பட்டேன்.

அம்மம்மாவுக்குத் தேவையான நீரைக் கிணற்றில் அள்ளிக் கொடுத்துவிட்டு, சாமி அறையிலிருந்து விபூதியையும் எடுத்துவந்து கொடுத்தேன்.

“அப்பனே பிள்ளையாரப்பா! நீதானப்பா எல்லாரையும் காப்பாத்த வேணும்...”

என்று சொல்லியபடி விபூதியை நெற்றியில் பூசிக்கொண்டதைப் பார்த்தபடியே என் கடமைகளுக்காகப் நான் புறப்பட்டேன். காலைக்கடனை முடித்துவிட்டு, பற்தூரிகையோடு மீண்டும் கிணற்றடிக்குச் சென்றுகொண்டிருக்கையில்.....

“தம்பீ... தம்பீ.....”

அப்பா தொலைவிலே கூப்பிடும் சத்தம்.

“ஓமப்பா.... வாறன்! வாறன்...”

என்றபடி ஓடிச்சென்று பார்த்த போது வயலுக்கு நீர் இறைத்துக் கொண்டிருக்க, எங்கள் தோட்டக் கிணற்றில் பூட்டப்பட்டிருந்த பெரிய மோட்டரிலிருந்து நீர் அருவியாகக் கொண்டிக்கொண்டிருந்தது. அந்தக் காட்சியைப் பார்க்கும்போது, ஒரு

குளியல் போடவேண்டும் என்ற ஆசை மனதுக்குள் தோன்றியது. ஆனாலும் அப்பா பேசுவார் என்ற பயத்தோடு, அவரின் தேவைகளை நிறைவேற்றிவிட்டு, முகம் கழுவியபடி வீட்டுக்கு வந்தேன். விபூதி தரித்துக் கடவுளை வேண்டிவிட்டு, வெளியில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டேன்.

“தம்பீ.... இந்தா பால்!”

அம்மா சுடச்சுடக் கொண்டு வந்த தேநீரைக் குடித்த படியே அம்மம்மாவுடன் பேசிக் கொண்டிருந்தேன். பின் அப்பாவுக்காகப் போத்தலில் ஊற்றித் தந்த தேநீரை எடுத்துக்கொண்டு வயலை நோக்கிப் புறப்பட்டேன். வயலுக்குச் செல்லும் ஒற்றையடிப் பாதையின் இருமருங்கும் கால்வாய்களில் நீர் ஓடுகின்ற சத்தம் ஒலித்துக் கொண்டிருந்தது. கால்வாய்களின் அருகுப்பகுதிகளில் தென்னந் தோப்புக்களும், வயல்வெளிகளும் காணப்பட்டன. சின்னஞ் சிறுவர்கள் அவ்வாய்க்காலில் குதித்துக் குளித்துக் கொண்டிருந்தார்கள். சிலர் தொலைவில் தூண்டில் போட்டுக் கொண்டிருப்பதும் தெரிந்தது.



இவற்றினைப் பார்த்தபடியே வயலுக்கு நகர்ந்துகொண்டிருந்தேன். மனம் இனிமையான பொழுதை அனுபவித்துக்கொண்டிருந்தது.

“அப்பா இந்தாங்கோப்பா...!”

கொண்டு வந்த தேநீரை அப்பாவிடம் கொடுத்துவிட்டு, அருகிலிருந்த மண்வெட்டியை எடுத்து வயலுக்கு நீர் பாய்ச்சத் தொடங்கினேன். அப்போதுதான் தனு அவனுடைய அப்பாவுடன் வயல்களைப் பார்வையிட்டபடி வந்து சேர்ந்தான்.

“டேய்! மச்சான்.. இண்டைக்கு ஒட்டிசுட்டான் சிவன் கோயில் தேராமடா! போவம் வாறியே?”

“உண்மையாவோடா..?”

“ஓமடா! உம்மையாத்தான். எல்லாப் பொடியளும் விடியவே போறாங்களடா..”

“சரி வயலப் பாத்திட்டு வா. ஆத்தில குளிச்சிட்டுப் போவம்.”

தனுவோடு கதைத்துவிட்டு நான் வீட்டுக்கு வந்து, எனது ஆடைகளை மின்னழுத்தியால் அயன் பண்ணிவிட்டு, ஆற்றுக்குப் போவதற்குத் தயாராகினேன். எங்கள் வயல் காணிக்குப் பக்கத்தில்தான் பேராறு ஓடுகிறது. வருடத்தில் எப்போதும் வற்றிவிடாமல் ஓடுவதால் அங்குதான் நாங்கள் அதிகம் குளிப்பதுண்டு.
“டேய்! வாறியோ வேகமா. நான் வந்திட்டன்.”

“வல்லாம் நில்லுடா. வல்லாம்.”

தனுவின் சத்தம் கேட்டது. உடனே அடுப்படியில் நின்ற அம்மாவை நோக்கி ஓடினேன்.

“அம்மா.. இண்டைக்குக் கோயிலுக்குப் போப்போறம்.. ஆத்தில குளிக்கப் போகட்டா?... தனு வந்திருக்கிறான்.”

“விடியக்காலத்தால ஆத்துக்குப் போறியளோ? கொப்பர் வந்தா பேசுவேர். கவனமா குளிச்சிட்டு வேகமா வாங்கோ..”

அம்மாவின் வார்த்தைகளைக் கேட்டபடியே தனுவோடு ஆற்றை நோக்கி ஓடினேன். எங்களின் பின்னால் தனுவின் நாய்க்குட்டி கண்ணம்மாவும் ஓடிவந்து கொண்டிருந்தது. கண்ணம்மா என்றால் தனுவுக்கு உயிர். தனுவெண்டால் கண்ணம்மாவுக்கு உயிர். ஓடி வந்த கண்ணம்மா தனுவின் தோள்களில் பாய்ந்து ஏறிக்கொண்டது. ஒற்றையடிப் பாதையினூடாக ஆற்றை நோக்கிப் பயணித்தோம். ஆற்றைச் சூழ்ந்திருந்த இயற்கைக் காட்சி எங்களை அமைதிப்படுத்தியது. ஆற்றங்கரையின் நீளத்திற்கும் மருத மரங்கள் காணப்பட்டன. அவற்றுக்கிடையே மாமரங்களும் நின்றிருந்தன. குரங்குகள் மாங்காய்களைப் பறித்து நாசம் செய்து கொண்டிருந்ததை அவதானித்தோம். குட்டிக் குரங்குகள் அங்கும் இங்கும் பாய்ந்து விளையாடிக் கொண்டிருந்தன. பறவைகளும் பழுத்திருந்த பழங்களைத் தின்று கொண்டிருந்தன. அதைப்பார்த்த எனக்கும் மாங்காய் சாப்பிட வேண்டும்போல் வாய் ஊறியது. சற்றும் யோசிக்காமல் உடனே பக்கத்தில் நின்ற தனுவை ஏற்றி மாங்காய் பறித்துக்கொண்டேன்.

“டேய் வீட்டபோய் உப்பும் தூளும் எடுத்துட்டு வாடா.. செமயா இருக்கும்..”

தனுவின் வார்த்தையைக் கேட்டபடி வீட்டை நோக்கி ஓடினேன். சிரட்டையில் உப்பும், தூளும் எடுத்து வந்தேன். பறித்த மாங்காய்களை ஆற்றுநீரிலே நன்கு கழுவிய பின் மாமரத்திலே குத்தி மாங்காய்களை உடைத்துக்கொண்டோம். உடைத்த துண்டுகளை உப்புத்தூளுடன் தொட்டுத் தொட்டுத் தின்னும்போது சொர்க்கம் தெரிவதை உணர்ந்தேன். அது கறுத்தக்கொழும்பான் மாங்காய் என்ற படியால் அவ்வளவு சுவையாக இருந்தது.

திடீரென ஆற்றில் பெரிய சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன்.

“டேய்! கண்ணம்மா ஆத்துக்குள்ள விழுந்துட்டடா...”

என்று சொல்லி முடிப்பதற்குள் தனு சற்றும் யோசிக்காமல் தான் பாசத்தோடு வளர்த்த கண்ணம்மாவைக் காப்பாற்ற ஆற்றினுள் குதித்து விட்டான். நானோ என்ன செய்வதென்று தெரியாமல் அங்குமிங்கும் பார்த்தேன். கண்ணுக்கெட்டிய தூரம்வரை யாரையும் காணவில்லை. நாய்க்குட்டியைக் காப்பாற்றச்

சென்ற தனுவோ ஆற்றுப் பள்ளத்தினுள் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்தான். எனக்கோ நீச்சல் தெரியாது. அவனுக்கும்தான்.

“ஐயோ!... ஐயோ! ஓடியாங்கோ! ஓடியாங்கோ!”

என்று வீரிட்டுக் கத்தினேன். எவரும் வரவில்லை. கண்ணம்மாவையும், தனுவையும் எப்படிக் காப்பாற்றுவது என்று எனக்குத் தெரியவில்லை. உடம்பு பயத்தால் நடுங்கியது. ஆனால் எந்த முன்னேற்றமும் இல்லை. சற்றுநேரத்தில் பெரிய ஆற்றுச்சுழி அவனை அடித்துச்செல்ல ஆரம்பித்தது. உடனே நான் அவன் செல்லும் பக்கமாகப் பெரிய கட்டை ஒன்றை எடுத்துப் போட்டேன். ஆனால் எந்தப் பலனும் இல்லை. நாய்க் குட்டியையும் காணவில்லை. பின் தனுவையும் காணவில்லை. தண்ணீருக்குள் தாழ்ந்து போனான். எனக்குப் பயம் இன்னும் அதிகரித்தது. பயத்தில் கத்திக்கொண்டு நின்றேன். திடீரென தாண்டுபோன தனு ஆற்றுக்குள் இருந்த மருத மர வேரைப் பிடித்துக்கொண்டு கிடந்தான். உடனே வயல்வெளிக்கு ஓடினேன். அப்போது யாரோ வயலுக்குள்ளிருந்து வந்துகொண்டிருந்தார்கள். உடனே அண்ணனை அழைத்துக் கத்தியபடி ஆற்றங்கரையை நோக்கி ஓடினேன். அண்ணனின் உதவியுடன் தனு மீட்கப்பட்டான். அவனுடைய கண்கள் மூடியிருந்தன. நான் செத்துவிட்டான் என்றே நினைத்தேன். உடனே அண்ணன் அவனுடைய வயிற்றை அமத்திக் கொண்டிருந்தார். தண்ணீரைக் கனக்க குடித்துவிட்டதால் தனுவின் வாய்க்குள்ளிருந்து நீர் வெளியேறியது.

“வற்றாப்பிளைத் தாயே இவன் தப்பிடோனும்மம்மா.... தப்பிடோனுமம்மா...!”

மனதுக்குள் வற்றாப்பளைக் கண்ணகித்தாயை வேண்டினேன். தனுவும் கண் விழித்தான். இப்போதுதான் எனக்கு நிம்மதி வந்தது. இருவரும் சற்று ஓய்வெடுத்தபின் வீட்டை நோக்கி நகர்ந்தோம். எங்களுடைய உள்ளத்தில் கண்ணம்மாவின் நினைவே வந்துகொண்டிருந்தது. வீட்டுக்குச் சென்று நடந்ததைக் கூறினோம். ஆனால் ஆற்றில் தனு தாண்ட செய்தியைக் கூறவில்லை. தனு வீட்டிலும் இதைத்தான் கூறினோம். கண்ணம்மாவின் இழப்பு எல்லோரையும் கலங்க வைத்தது. கவலையுடன் இருவரும் கோவிலை நோக்கிச் சைக்கிள்களில் பயணித்தோம். இன்று ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரம் கோவிலில் தேர்த்திருவிழா. வீதிகளில் நிறைந்த மக்கள் கூட்டம் கோவிலுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். வீதிகளில் சொகுசுக் கார்களும், பெரிய பெரிய வாகனங்களும் சென்று கொண்டிருந்தன. சனங்கள் மாட்டு வண்டில்களிலும் பயணித்துக் கொண்டிருந்தார்கள். இவற்றைப் பார்த்தபடியே நாங்களிருவரும் கண்ணம்மாவின் பிரிவுத்துயரோடு கோவிலை வந்தடைந்தோம்.

வந்தவுடன் மிதிவண்டிகளை பார்க்கிங்கில் நிறுத்திவிட்டுக்

கோயிலுக்குள் சென்றோம். இராஜகோபுரம் எங்களை வரவேற்கும்படி அழகாக இருந்தது. தேர் இழுப்பதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இராஜ கோபுரத்தை வணங்கிபடி உள்ளே சென்றோம். கோயிலைச் சுத்தி வணங்கிவிட்டுக் கடைபோட்டிருக்கும் பக்கம் சென்றோம். அங்கும் சனங்கள் கூடி நின்றார்கள். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அங்குமிங்கும் திரிந்தபடி தமக்கு விரும்பிய பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தார்கள். எங்களுக்குக் கோயில் நிகழ்வுகள் மகிழ்ச்சியையே தரவில்லை. தனுவுக்கு மனது முழுவதும் கண்ணம்மாவின் நினைவே ஓடிக்கொண்டிருந்தை உணர்ந்தேன்.

பக்த அடியவர்கள் பலவிதமான நேர்த்திகளைச் செய்யும் வண்ணம், கோயிலை வலம் வந்து கொண்டிருந்தார்கள். பாற் காவடி, பன்னீர்க் காவடி, தீர்த்தக் காவடி, தூக்குக் காவடி, கற்பூரச்சட்டி, பாற்செம்பு, பறவைக் காவடி என நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் ஐஸ்கிறிம் வாங்கிச் சுவைத்தபடி எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தோம். நேரமும் சென்றுகொண்டிருந்தது.

காலை ஒன்பது மணியிருக்குமென நினைக்கிறேன். தேர் இழுக்க ஆரம்பித்துவிட்டது. நாங்களும் ஓடிச்சென்று தேர் வடத்தினைப் பிடித்துக் கொண்டோம். அங்கே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்து வந்திருந்த அண்ணாமார்களும், அக்காமார்களும் கலாசார ஆடைகளில் சுற்றித்திரிந்து கொண்டிருந்தார்கள். யாரோ ஒரு சிறுவன் தொலைந்ததாக அறிவிப்பு நிகழ்ந்து கொண்டிருந்தது. அந்தச் சிறுவன் அழும் சத்தத்தையும் ஒலிபரப்பிக் கொண்டிருந்தார்கள். அவ்வளவு சனம் இன்று கூடி, தேர்த்திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. நாங்களும் தேரினை இழுப்பதில் ஆர்வமாக இருந்தோம்.

திடீரெனத் தனுவின் தொலைபேசிக்கு அழைப்பு வந்தது. எடுத்துக் காதில் வைத்துக் கலோ... கலோ... என்றான் ஒன்றும் விளங்கவில்லை. அம்மா என்று என்னிடம் சொல்லியபடி கொஞ்சத்தூரம் நகர்ந்து சென்று ஏதோ பேசிக் கொண்டிருந்தான். நானும் அவனருகில் ஓடிச்சென்றேன்.

“டேய் கண்ணம்மா காலொண்டு முறிஞ்சபடி நடக்கேலாம வீட்டு முத்தத்தில இழுத்து இழுத்துக் கிடக்காமடா.... வாடா போவம்....”

என்று சொல்லியபடி சைக்கிள் பார்க்கை நோக்கி ஓடினோம். சைக்கிள் பார்க்கிலிருந்து சைக்கிளை எடுத்துக்கொண்டு, அவனை முந்திபடி தார்றோட்டுக்கு ஏறி வேகமாக மிதிக்கத் தொடங்கினேன். என் பின்னால் தனுவும் வேகமாகவே வீதியைக் கடந்துகொண்டிருந்தான். திடீரெனப் பாரிய சத்தம். திரும்பிப் பார்த்தேன். தனுவைக் காணவில்லை. அதில் நின்ற சனங்களெல்லாம் தலையில் கைவைத்தடி ஓடினார்கள். சைக்கிளை நிறுத்தித் தள்ளிவிட்டு நானும் அவர்களின் பின்னால்

ஓடிச்சென்றேன். பெரிய டிப்பர் ஒன்று நடுவீதியில் நிறுத்தப்பட்டிருந்தது. டிப்பரின் சில்லுக்குள் சைக்கிள் நசுங்கிக் கிடக்க, இரத்தம் பரவி வீதியையையே சிவப்பாக்கியது. சன நெரிசலுக்குள்ளால் உள்நுழைந்து அருகில் சென்றேன்.

“என்ரை ஐயோ!... தனு... எங்கள விட்டிற்றுப் போட்டியேடா....”

என்று கண்ணீர் பெருகத் தலையில் அடித்துக் கதறியபடி மல்லாக்காய் நிலத்தில் சரிந்தேன். சில்லுக்குள் நெரிபட்டுச் சிதைந்துபோன தனுவின் உடலும் துடிதுடித்து ஓய்ந்துபோக, அவனது விழிகளும் நெற்றிக்குள் புதைந்தபடி வெள்ளை பிரட்டிக் கிடந்தன.......

*****

# இந்தியாவில் மிகப்பெரிய இரயில் விபத்து

ஒடிஷா மாநிலம் பாலசோர் அருகே 2 பயணிகள் ரயில்களும், ஒரு சரக்கு ரயிலும் மோதிக் கொண்ட விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 238 ஆக உயர்ந்துள்ளதாக அறியமுடிகிறது.

ஹவுரா - சென்னை கோரமண்டல் எக்ஸ்பிரஸ், யஷ்வந்த்பூர் - ஹவுரா சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ஆகியன விபத்தில் சிக்கியுள்ளன..

ஹவுராவில் இருந்து சென்னை நோக்கி வந்து கொண்டிருந்த கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில், பாலசோர் அருகே



பஹானாகா பஜார் ஸ்டேஷன் என்ற இடத்தில் சரக்கு ரயில் ஒன்றின் மீது மோதியதில் அதன் சில பெட்டிகள் தடம் புரண்டன. அந்த பெட்டிகளை ரயில்வே ஊழியர்கள் மீட்டு அருகே இருந்த தண்டவாளத்தில் நிறுத்திவைத்திருந்தனர்.

அச் சமயத்தில், அந்த தண்டவாளத்தில் யஷ்வந்த்பூரில் இருந்து ஹவுரா நோக்கி சென்று கொண்டிருந்த எக்ஸ்பிரஸ் ரயில் மோதியால் குறித்த விபத்து நடந்ததாக கூறப்படுகிறது.

சென்னை நோக்கி வந்த இரயில் என்பதால் அதிகளவு தமிழர்கள் பயணம் செய்துள்ளதாகவும் அறியமுடிகிறது.

விபத்தில் பலியான உயிர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் அவர்களின் உறவுகளின் துயரில் தமிழும் பங்குகொள்கிறோம்.

# செயற்கை இறைச்சிக்கு அமெரிக்கா அனுமதி



ஆய்வகத்தில் வளர்க்கப்பட்ட இறைச்சியை நுகர்வோருக்கு வழங்க அமெரிக்கா அனுமதி வழங்கியுள்ளது. உலகம் முழுவதும் இறைச்சிக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. அதேவேளையில் இறைச்சிக்காக விலங்குகளை கொல்லக்கூடாது என்று பல அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன. இதற்கிடையே பல்வேறு நாடுகளில் மாட்டு இறைச்சியை உருவாக்கும் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. விலங்குகளின் உயிரணுக்களில் இருந்து செயற்கை இறைச்சி உருவாக்கப்பட்டுள்ளது. ஆய்வகத்தில் வளர்க்கப்பட்ட இறைச்சி குறித்து ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்றன.

செயற்கை இறைச்சிக்கு அனுமதி அளிக்கக்கோரி அமெரிக்க உணவு மற்றும் மருந்துகள் நிர்வாகத்திடம் இரண்டு நிறுவனங்கள் விண்ணப்பித்தன. இந்நிலையில் ஆய்வகத்தில் வளர்க்கப்பட்ட இறைச்சி விற்பனைக்கு அமெரிக்காவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கோழி உயிரணுக்களில் இருந்து நேரடியாக வளர்க்கப்படும் இறைச்சியை விற்க அப்சைடு புட்ஸ், குட்மீட் ஆகிய நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. இதன்மூலம் ஆய்வகத்தில் வளர்க்கப்பட்ட இறைச்சியை நுகர்வோருக்கு வழங்க அனுமதிக்கும் 2-வது நாடு அமெரிக்கா ஆகும்.

ஏற்கனவே சிங்கப்பூரில் செயற்கை கோழி இறைச்சி விற்பனைக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் ஈட் ஜஸ்ட் நிறுவனம், சிங்கப்பூ ரில் செற்கை இறைச்சியை விற்கிறது. விலங்குகள் தசையில் இருந்து எடுக்கப்படும் செல்களை வைத்து ஆய்வுக் கூடங்களில் வளர்க்கப்படும் இந்த வகை இறைச்சியானது வளர்ப்பு இறைச்சி என்று வகைப்படுத்தப்படுகிறது. கோழியின் செல்களை பிரித்தெடுத்து அவற்றுடன் சில சத்துப் பொருள்களை கலந்து ஆய்வகத்தில் செயற்கை இறைச்சி உருவாக்கப்படுகிறது.

இது தொடர்பாக அப்சைடு புட்ஸ் நிறுவன தலைவர் உமா லவேட்டில் கூறும்போது, ”அமெரிக்காவில் செயற்கை இறைச்சிக்கு ஒப்புதல் அளித்து இருப்பது இறைச்சியை நமது மேஜையில் சேர்க்கும் விதத்தை மாற்றும். இது மிகவும் நிலையான எதிர்காலத்தை நோக்கிய ஒரு மாபெரும் படியாகும். வாழ்க்கையை பாதுகாக்கும் ஒன்று” என்றார்.

ஆய்வு அரசர்கள் போட்டியில் முதலாம் இடம் பெற்ற ஆய்வு

5

# மாணவர் மத்தியில் கொரோனாவின் தாக்கம்



தெ. வஜிதா

கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவர்கள் மத்தியிலான கொரோனா பற்றிய அறிவு பற்றிய ஆய்வில் கொரோனா வைரஸ் தொற்றுடைய ஒருவரின் உடல் வெப்பநிலை குறித்து கேட்டறிந்த போது பின்வரும் தெரிவுகளை மேற்கொண்டிருந்தனர். இதனைப் பண்புசார் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன.

“எங்களுக்கு இது குறித்த விளக்கம் இருந்தாலும் பள்ளிக்கூடம் வரேக்கயும் வேற இடத்துக்கு போகோணும் எண்டாலும் முகக் கவசம் ஒரு நாளைக்கு ஒண்டு இல்ல ரெண்டு வேணும். ஒரு நாள் ரெண்டு நாள் எண்டா பறவாயில்ல. ஒவரு நாளும் முகக் கவசத்துக்கு எங்க போறது. எங்கட அப்பா கூலி வேலைக்கு போறவர். வீட்ட இருக்குற சிலவுகளுக்கே காசு இல்ல. இதுல மாஸ்க் வாங்குறேக்கு என்ன செய்யுற” என்று கூறினார். (விடய ஆய்வு- 02)

வைரஸ் அதிகளவு உயிருடன் வாழுகின்ற இடங்கள், அதிகளவு பாதுகாப்பினை வழங்குளின்ற N95, FFP2 வடிகட்டி முகமூடிகளின் கால அளவு, கொரோனா வைரஸ் தொற்றுக்கான காரணி, கொரோனா வைரஸில் உள்ள மரபணுப் பொருட்களின் வகை, கொரோனா வைரஸ் இனைக் கண்டறியும் செயன்முறை, நோய் தொற்று ஏற்படும் முக்கிய வழி என்பவற்றை அடியாகக் கொண்டு கொரோனா வைரஸ் பரவல் குறித்த மாணவர்களின் அறிவு நிலை ஆய்வுக்குட்படுத்தப்பட்டது.

14.9% ஆனவர்கள நீர் மேற்பரப்புகளில் வைரஸ் அதிகளவு உயிருடன் வாழுகின்றது என குறிப்பிட்டுள்ளதுடன் 57.4% ஆடை மேற்பரப்புகளில் வைரஸ் உயிருடன் வாழ்வதாகவும் குறிப்பிட்டுள்ளனர். இதன் படி பார்க்கின்ற போது கொரோ வைரஸ் உயிருடன் வாழும் இடம் குறித்த தெளிவினை 14.9% ஆனவர்கள் அறிந்திருக்கவில்லை.

அதே போன்று கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு முகக் கவசம் குறித்த தெளிவு அவசியம் என்ற அடிப்படையில் முகமூடிகளின் கால அளவு குறித்த மாணவர்களின் தெரிவில் 52.5 % ஆனவர்கள் மட்டுமே N95, FFP2 வடிகட்டி முககவசங்கள் எட்டு மணி நேரம் என்ற தெளிவினை பெற்றிருக்கின்றனர். ஏனையவர்கள் அது குறித்த பூரண அறிவினைக் கொண்டிருக்கவில்லை. அதற்கு முக்கிய காரணம் கொரோனா வைரஸ் குறித்தும் அதன் பரவல் மற்றும் முகக் கவசங்கள் குறித்தும் மாணவர்களின் பெற்றோர்கள் பூரண அறிவினை பெற்றிராமையும் அவர்களிற்கு அது குறித்த விழிப்புணவர்வுகள் வழங்கப்படாமையுமே காரணமாகக் காணப்படுகின்றது. இதனைப் பண்புசார் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன.

"ஆரம்பத்தில் கொரோனா தொடர்பாக எந்தவொரு விழிப்புணர்வும் இல்லாததால் நாங்கள் பாடசாலைக்குச் சென்றாலும் அது தொடர்பான விழிப்புணர்வும் எமக்கில்லை. இப்போது உலக சுகாதார ஸ்தாபனத்தால் பல்வேறுபட்ட சுகாதார விழிப்பணர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் தற்போது அது தொடர்பாக அறிந்து கொள்ளக் கூடியதா இருக்குது. எங்கட பெற்றோருக்கும் அது தொடர்பான சரியான விழிப்புணர்வு கிடைக்கேல" என கூறுகின்றார். (விடய ஆய்வு-01)



இவர்களில் 52.5% ஆனவர்கள் N95 மற்றும் FFP2 வடிகட்டி முகமூடிகளின் கால அளவு குறித்த சரியான விளக்கத்தை கொண்டவர்களாக காணப்படுகின்றனர். .இவர்களில் முககவசம் குறித்த விளக்கத்தை கொண்டிருப்பினும் அவர்களின் பொருளாதார நிலை வீட்டு சூழல் காரணமாக ஒரு முறை அணிந்த முகக் கவசத்தினை மீண்டும் மீண்டும் பாவிக்கின்ற நிலை காணப்படுகின்றது. இதனைப் பண்புசார் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன. ஆய்வுக்குட்படுத்தபட்டவர்களில் 33.7% ஆன மாணவர்கள் முகக் கவசங்களை கிருமி நீக்கம் செய்து மறு பயன்பாட்டிநற்கு பயன்படுத்த முடியும் என கூறியிருக்கின்றனர். இதனைப் பண்புசார் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன.

"நாளாந்த கூலி வேலையினைச் செய்கின்ற குடும்பத்தைச் சேர்ந்த நாங்கள் சரியான முறையில சுகாதார விதிமுறைகளினைப் பின்பற்ற முடியாத நிலை காணப்படுகின்றது. ஒரு நாள் முகமூடியினைப் பாவிக்கும் போது கூட குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அதாவது குறிப்பிட்ட மணித்தியாலத்திற்கு பின்னர் கூட மாற்றுவதற்கான வசதியற்ற நிலை காணப்படுகின்றது. நாங்க பாடசாலைக்க போறோம் எண்டுறத்துக்காக

எங்கட பெற்றோர் துணியால செய்யப்பட்ட முகமூடியினைக் கூட போட்டுப் கொண்டு வேலைக்குப் போற நிலை காணப்படுகின்றது. இதால அதிகளவிலான சன நடமாட்டம் உள்ள இடங்களிற்கு போறத்துக்குக் கூட சரியான வழிமுறைகளினைப் பின்பற்ற முடியாத நிலை காணப்படுகின்றது." (விடய ஆய்வு-04)



இவர்களில் சிலர் தம் உடல்நிலை காரணமாக முகமூடிகளை அணிவதில் பிரச்சினையை எதிர்கொள்கின்றனர். ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் 100% ஆனவர்கள் கொரோனா வைரஸ் நோய் தொற்றுக்கான காரணி வைரஸ் என்பது குறித்த தெளிவினை உடையவர்களாக காணப்படுவதுடன் இவர்களில் 80% ஆனவர்கள் கொரோனா வைரஸில் அடங்கியிக்கும் மரபணுப் பொருட்களின் வகை DNA எனவும் ஏனைய 20% ஆனவர்கள் அது குறித்து தெரியவில்லை எனவும் கூறியிருக்கின்றனர். இதன்படி மாணவர்கள் கொரோனா வைரஸ் குறித்த அறிவினை கொண்டிருந்தாலும் அவர்களினால் சுகாதார நடைமுறைகளை சரிவர பின்னபற்ற முடிவதில்லை. அத்துடன் உள ரீதியாக மாணவர்கள் கொண்டிருக்கும் எண்ணப்பாங்குகளும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமல் இருப்பதற்கு காரணமாக அமைகின்றது. இதனைப் பண்புசார் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன.

"இதனைவிட இன்று வெளியில் செல்லும் போது கட்டாயமாக முகக்கவசம் அணிய வேண்டும் என்பது எழுதப்படாத விதியாக மாறிவிட்டது. எனக்கு இயல்பிலேயே தடிமல், சளி இலகுவில் பற்றிவிடும். எனவே நான் அடிக்கடி சுவாசநோயால் பாதிக்கப்படுவது உண்டு. இன்று இந்த முகக்கவசமானது அணிவது எனக்கு சுவாசக் கோளாறை ஏற்படுத்துகின்றது. அதிகமான நேரம் என்னால் முகக் கவசத்தை அணியமுடியாத நிலையுள்ளது." (விடய ஆய்வு -05)

மாணவர்களிடம் கொரோனா வைரஸ் தொற்று குறித்த உளப்பாங்கினை ஆய்வுக்குட்படுத்திய போது அவர்களில் தனிமைப்படுத்தல் நடவடிக்கை மூலமாக கொரோனா வைரஸ் தொற்றினை தடுக்க முடியும் என 100% ஆனவர்கள் கூறியிருப்பினும் இவர்களில் 89.1% ஆனவர்களே தன்னார்வ சோதனையை செய்து கொள்வதில் தயாராக இருக்கின்றனர்.

மாணவர்களின் உளப்பாங்கு குறித்து மாணவர்களிடம் வினாவிய போது வலுவான உடல் நிலை என்பது கொரோனா தொற்றில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் என்பதில்

30.7% ஆனவர்கள் முழுமையாக ஏற்றுக்கொண்டிருப்பதுடன் 38.6% ஆனவர்கள் ஏற்றுக்கொள்வதாகவும் கூறியிருக்கின்றனர். இவர்களில் 14.9%ஆன மாணவர்கள் மட்டுமே முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் 7.9% ஆனவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் பதிலளித்திருக்கக் காணலாம்.

மாணவர்களின் உளப்பாங்கு குறித்து மாணவர்களிடம் வினாவிய போது கைகளைக் கழுவும் போது வாசனைத் திரவியங்களையும் சவர்க்காரங்களினையும் போட்டுக் கழுவுதல் தொடர்பாக 51.5% ஆன மாணவர்கள் ஏற்றுக் கொள்வதுடன் 03% ஆன மாணவர்கள் தமக்குத் தெரியாது எனவும் பதிலளித்து இருக்கிறார்கள். அத்துடன் 9.9% ஆன மாணவர்கள் முழுமையாக இக் கருத்தினை ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.



ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களின் நடத்தை ஆய்வுக்குட்படுத்தபட்ட போது கொரோனா கால சூழலிலும் 58.4% ஆனவர்கள் நெரிசலான இடங்களிற்கு சென்றிருப்பதுடன் அவர்களில் 97% ஆனவர்கள் வீட்டை விட்டு வெளியேறும் போது முகமூடி அணிந்தே செல்கின்றனர். இவர்களில் மிகவும் குறைந்தளவானவர்களே முகமூடி அணியாது வெளி இடங்களுக்கு செல்வதாக கூறியிருக்கின்றனர்.

*ஆராய்வோம்...*

## நடத்துனர்கள் இன்றி பஸ்



எதிர்வரும் ஜூலை 1 முதல் அதிவேக நெடுஞ்சாலையில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களை நடத்துனர்கள் இன்றி இயக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்த பஸ்களில் பயணத்தின் ஆரம்பத்தில் மாத்திரமே பயணச்சீட்டு வழங்கப்படும். அண்மையில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இலங்கை போக்குவரத்து சபை பஸ்ஸ ில் 34 பயணிகளுக்கு போலியான பயணச் சீட்டு வழங்கியமை அம்பலமானதை தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை எதிர்வரும் 03 மாதத்திற்குள் இலங்கையின் சகல பேருந்துகள் மற்றும் தொடரூந்துகளில் இலத்திரனியல் பயணச்சீட்டு வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்படும் என போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

# கிரிக்கெட் உலகக்கிண்ணம் 2023

## [மைதானங்கள் ஒரு பார்வை]

எஸ்.எஸ்.நுஜன்




கடந்த மூன்று கிரிக்கெட் உலக கிண்ண தொடர்களில் தொடரை நடாத்திய நாடுகளே கிண்ணத்தை வென்ற நிலையில், வருகிற ஒக்டோபர் 5ம் திகதி 2023க்கான கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடர் இந்தியாவில் ஆரம்பமாகிறது் இதன் இறுதி போட்டி நவம்பர் 19 நடைபெறும். இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென்னாப்பிரிக்கா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய எட்டு அணிகள் தேர்வாகியுள்ள நிலையில் மிதமுள்ள இரு இடங்களுக்கான அணிகளை தேர்வு செய்யும் தொடர், சிம்பாப்வே நாட்டில் இடம்பெற்று வருகிறது் இது வருகிற யூலை 7ம் திகதி நிறைவு பெறவுள்ளது.

ஐசிசி கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடருக்கான அட்டவணையும் கடந்த யூன் 27ம் திகதி அறிவித்துள்ள நிலையில் இத்தொடர் 10 மைதானங்களில் இடம்பெறவுள்ளது் அவை தொடர்பான விபரங்களுடன் இந்த கட்டுரை.

### (1) எம். சின்னசுவாமி ஸ்டேடியம் – பெங்களூரு

1969 இல் உருவான இந்த அரங்கு கர்நாடக மாநிலத்தில் உள்ளது. 1977 - 1980 காலப்பகுதியில் இந்திய கிரிக்கெட் சபை தலைவராக இருந்த மங்களம் சின்னசுவாமி அவர்கள் கர்நாடக கிரிக்கெட்க்கு செய்த 40 வருடகால அர்ப்பணிப்புக்காக அவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இம்மைதானத்திற்கு தேவையான

மின்சாரம் சூரிய சக்தியில் இருந்து அதிகளவாக தயாரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



இங்கு ஐந்து போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில் அவற்றில் நான்கு பகலிரவு போட்டிகள் ஆகும் அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்து - பாகிஸ்தான் போட்டிகள் கவனிக்க கூடியவையாக இருக்கின்றன.

### (2) இமாசலப் பிரதேச கிரிக்கெட் ஸ்டேடியம் – தர்மசாலா

கண் கவரும் மைதானமாக கடல் மட்டத்திலிருந்து 1317 மீட்டர் உயரத்தில் உள்ள இந்த ஸ்டேடியம் 2005 இல் உருவாக்கப்பட்டது. 23000 பேர் கண்டு களிக்க கூடிய இந்த



மைதானத்தில் எடுக்கப்படும் படங்கள் அடிலெய்ட் ஓவல் மற்றும் நியுலென்ட் மைதானங்கள் போன்று அழகானவை. இந்த ஆடுகளம் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமானதும் கூட. இந்திய - நியூஸிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா - நியூஸிலாந்து போட்டிகள் எதிர்பார்ப்புகள் நிறைந்ததாக உள்ளது இங்கும் ஐந்து போட்டிகள் நடைபெறவுள்ளது (அதில் மூன்று பகலிரவு போட்டிகள்).

### (3) ராஜீவ்காந்தி சர்வதேச ஸ்டேடியம் – ஐதராபாத்


விசாக சர்வதேச கிரிக்கெட் மைதானம் என்றும் அழைக்கப்படுகிற இந்த மைதானம் 16 ஏக்கர் பரப்பளவில் ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ளது.



சின்னசுவாமி ஸ்டேடியம் போன்று அதிக ஓட்டங்கள் குவிக்கப்படும் ஆடுகளம் ஆகும். இங்கு மூன்று போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில், பயிற்சி போட்டிகளும் நடைபெறும் மைதானங்களில் ஒன்றாகவுள்ளது.

### (4) மகாராட்டிர கிரிக்கெட் அசோசியேசன் ஸ்டேடியம் – பூனே

கடந்த உலகக் கிண்ணத் தொடர் இந்தியாவில் நடைபெற்ற போது இந்த மைதானமே இந்தியாவில் இல்லை அதன் பின்னரே உருவானது. இதுவரை வெறுமனே ஏழு ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளே இங்கு நடைபெற்றுள்ளன. நடைபெறவுள்ள உலகக் கிண்ண தொடரில் ஐந்து போட்டிகள் நடைபெறுகின்றன் இதில் தென்னாப்பிரிக்கா - நியூசிலாந்து இடையேயான போட்டி எதிர்பார்ப்பு நிறைந்த போட்டியாகவுள்ளது. அதிகளவான ஓட்டங்கள் குவிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளது.



### (5) பாரத ரத்னா அடல் பிகாரி வாஜ்பாய் எக்னா கிரிக்கெட் ஸ்டேடியம் – லக்னோ

இதுவும் 2017 இல் உருவான ஒரு புதிய மைதானம் இங்கு இதுவரை வெறுமனே நான்கு ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளே நடந்துள்ளன் இந்திய அணி கடந்த 2022 இல் தென்னாப்பிரிக்காவிடம் தோற்ற மைதானமும் கூட் இதை விட அங்கு மற்றைய மூன்று



போட்டிகளும் ஆப்கானிஸ்தான் - மேற்கிந்தியத் தீவுகள் இடையேயான போட்டிகளாகும். ஆனால் இந்த உலகக் கிண்ணத் தொடரின் ஐந்து போட்டிகள் இங்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவற்றில் இந்திய - இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா - தென்னாப்பிரிக்கா போட்டிகள் மிகவும் முக்கியமான இரு போட்டிகளாக உள்ளன.

*மிகுதி ஐந்து மைதானங்களும் அடுத்த இதழில்.......*



ICC MEN'S CRICKET WORLD CUP INDIA 2023

# FIXTURES

## 5 OCTOBER - 19 NOVEMBER 2023

| | | | | |
|---|---|---|---|---|
| Thursday, 5 October | ENGLAND | V | NEW ZEALAND | Ahmedabad |
| Friday, 6 October | PAKISTAN | V | QUALIFIER 1 | Hyderabad |
| Saturday, 7 October | BANGLADESH | V | AFGHANISTAN | Dharamsala |
| Saturday, 7 October | SOUTH AFRICA | V | QUALIFIER 2 | Delhi |
| Sunday, 8 October | INDIA | V | AUSTRALIA | Chennai |
| Monday, 9 October | NEW ZEALAND | V | QUALIFIER 1 | Hyderabad |
| Tueday, 10 October | ENGLAND | V | BANGLADESH | Dharamsala |
| Wednesday, 11 October | INDIA | V | AFGHANISTAN | Delhi |
| Thursday, 12 October | PAKISTAN | V | QUALIFIER 2 | Hyderabad |
| Friday, 13 October | AUSTRALIA | V | SOUTH AFRICA | Lucknow |
| Saturday, 14 October | ENGLAND | V | AFGHANISTAN | Delhi |
| Saturday, 14 October | NEW ZEALAND | V | BANGLADESH | Chennai |
| Sunday, 15 October | INDIA | V | PAKISTAN | Ahmedabad |
| Monday, 16 October | AUSTRALIA | V | QUALIFIER 2 | Lucknow |
| Tueday, 17 October | SOUTH AFRICA | V | QUALIFIER 1 | Dharamsala |
| Wednesday, 18 October | NEW ZEALAND | V | AFGHANISTAN | Chennai |
| Thursday, 19 October | INDIA | V | BANGLADESH | Pune |
| Friday, 20 October | AUSTRALIA | V | PAKISTAN | Bengaluru |
| Saturday, 21 October | ENGLAND | V | SOUTH AFRICA | Mumbai |
| Saturday, 21 October | QUALIFIER 1 | V | QUALIFIER 2 | Lucknow |
| Sunday, 22 October | INDIA | V | NEW ZEALAND | Dharamsala |
| Monday, 23 October | PAKISTAN | V | AFGHANISTAN | Chennai |
| Tueday, 24 October | SOUTH AFRICA | V | BANGLADESH | Mumbai |
| Wednesday, 25 October | AUSTRALIA | V | QUALIFIER 1 | Delhi |
| Thursday, 26 October | ENGLAND | V | QUALIFIER 2 | Bengaluru |
| Friday, 27 October | PAKISTAN | V | SOUTH AFRICA | Chennai |
| Saturday, 28 October | QUALIFIER 1 | V | BANGLADESH | Kolkata |
| Saturday, 28 October | AUSTRALIA | V | NEW ZEALAND | Dharamsala |
| Sunday, 29 October | INDIA | V | ENGLAND | Lucknow |
| Monday, 30 October | AFGHANISTAN | V | QUALIFIER 2 | Pune |
| Tueday, 31 October | PAKISTAN | V | BANGLADESH | Kolkata |
| Wednesday, 1 November | NEW ZEALAND | V | SOUTH AFRICA | Pune |
| Thursday, 2 November | INDIA | V | QUALIFIER 2 | Mumbai |
| Friday, 3 November | QUALIFIER 1 | V | AFGHANISTAN | Lucknow |
| Saturday, 4 November | ENGLAND | V | AUSTRALIA | Ahmedabad |
| Saturday, 4 November | NEW ZEALAND | V | PAKISTAN | Bengaluru |
| Sunday, 5 November | INDIA | V | SOUTH AFRICA | Kolkata |
| Monday, 6 November | BANGLADESH | V | QUALIFIER 2 | Delhi |
| Tueday, 7 November | AUSTRALIA | V | AFGHANISTAN | Mumbai |
| Wednesday, 8 November | ENGLAND | V | QUALIFIER 1 | Pune |
| Thursday, 9 November | NEW ZEALAND | V | QUALIFIER 2 | Bengaluru |
| Friday, 10 November | SOUTH AFRICA | V | AFGHANISTAN | Ahmedabad |
| Saturday, 11 November | INDIA | V | QUALIFIER 1 | Bengaluru |
| Sunday, 12 November | ENGLAND | V | PAKISTAN | Kolkata |
| Sunday, 12 November | AUSTRALIA | V | BANGLADESH | Pune |
| Wednesday, 15 November | | SEMI FINAL 1 | | Mumbai |
| Thursday, 16 November | | SEMI FINAL 2 | | Kolkata |
| SUNDAY, 19 NOVEMBER | | FINAL | | AHMEDABAD |